# உதயன்

சுடர் : 36 | கதிர் : 221 | திங்கட்கிழமை | ஆனி 21 ஆம் நாள் 05 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


- ஆலய வழிபாடுகளுக்கு அனுமதி இல்லை
- திருமண நிகழ்வுகளுக்கு தொடர்ந்து தடை
- திரையரங்குகளைத் திறக்க முடியாது
- ஆடைத்தொழிற்சாலைகள் இயங்க அனுமதி

## மேலும் 45 சாவு மொத்தக் காவு 3,236

கொழும்பு, ஜூலை 5

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மேலும் 45 பேர் உயிரிழந்துள் 19

## யாழ்ப்பாணத்தில் ஒருவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றுக் காரணமாக நேற்று ஒருவர் உயிரிழந்துள்ளார். 53 வயதுடைய பெண்ணொரு 19

## கிளிநொச்சியில் மற்றொருவர் பலி

கிளிநொச்சி, ஜூலை 5

கொரோனாத் தொற்றுக் காரணமாக கிளிநொச்சியில் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார். 19

## வடக்கில் கொரோனா 41

யாழ்ப்பாணம், ஜூலை 5

வடக்கு மாகாணத்தில் நேற்று 41 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப் 19

## மாகாண பயணத்தடை 19வரையில் தொடரும்

கொழும்பு, ஜூலை 5

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துத் தடை எதிர்வரும் 19ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியு 19

## புதிய சுகாதார வழிகாட்டல்களை வெளியிட்டது சுகாதார அமைச்சு

கொழும்பு, ஜூலை 5

நாட்டின் தற்போதைய கொரோனா பரவல் நிலைமையைக் கருத்தில் கொண்டு புதுப்பிக்கப்பட்ட சுகாதார வழிகாட்டல்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன வெளியிட்டுள்ளார். 19

# ஒற்றுமை முயற்சியை தொடர்வதற்கு முடிவு!

### மாவை., செல்வம், சித்தார்த்தன், சுரேஷ் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையிலான ஒற்றுமை முயற்சியை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கைவிடாது, அந்த முயற்சியை தொய்வின்றி முன்னெடுப்பதற்கு நேற்றைய சந்திப்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 19

## உ/த பரீட்சைக்கு விண்ணப்பிக்குக!

யாழ்ப்பாணம், ஜூலை 5

2021ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பாடசாலை மாண 19

## இராணுவ மருத்துவமனைகளில் இன்று முதல் கொவிட் தடுப்பூசி

கொழும்பு, ஜூலை 5

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட நாட்டில் தெரிவு செய்யப்பட்ட சில இராணுவ வைத்தியசாலைகளில் இன்று முதல் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை 19

## மாஸ்க் அணியவில்லை என இளைஞன் மீது சிப்பாய் தாக்குதல்

### பொலிஸில் முறைப்பாடு

புதுக்குடியிருப்பு, ஜூலை 5

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரணைப்பாலைச் சந்தியில் கடமையில் 19

## பதிவுத் திருமணத்துக்கு சென்றவர்கள் தனிமை!

*ஊர்காவற்றுறை பகுதியில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஜூலை 5

ஊர்காவற்றுறைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற பதிவுத் திருமணத்துக்குச் சென்ற ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை பருத்திய டைப்புப் பகுதியைச் சேர்ந்த 18

கோண்டாவிலில் இடம்பெற்ற

## வாள்வெட்டுக்கு காரணம் ஆயுதக்குழுவின் பிளவே

*கைதான மூவர் வாக்குமூலம் என்று பொலிஸார் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 5

கோண்டாவில் செல்வபுரம் பகுதியில் இடம்பெற்ற வன்முறைக்கு சமூகவிரோதக் குழுவாகச் செயற்படும் ஒரு வாள் வெட்டுக் குழுவிலிருந்து சிலர் பிரிந்துசென்று பிறிதொரு குழுவாக இயங்குகின்றமையும், அவ்வாறு இயங்கத் தொடங்கிய புதிய குழுவுக்கு பாடல் எழுதி ஒலிபரப்பியமையுமே கார 18



## கொரோனா 1,517

கொழும்பு, ஜூலை 5

நாட்டில் நேற்று 1,517 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப் 19

## சுகாதார அமைச்சர் பவித்ரா வற்றாப்பளையில் வழிபாடு!

முல்லைத்தீவு, ஜூலை 5

சுகாதாரத்துறை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தனது குடும்பத்தவர்கள் சகிதம் முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் நேற்று வழிபாட்டில் ஈடுபட்டார். அண்மையில் கொரோனாப் பெருந்தொற்றால் 18

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அடிக்கல் நடுகைசெய்த பின்னர் பயனாளிகள் பட்டியல் மீளாய்வு!!

## யாழ்ப்பாணத்தில் அதிகரித்த அரசியல் தலையீடுகளால் இந்த நிலைமை

**யாழ்ப்பாணம், ஜூலை 5**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீட்டுத்திட்டத்தில் உள்ளூர் அரசியல்வாதி ஒருவரின் ஆதரவாளர்கள் பயனாளிகளாக இணைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் அரச உயர்மட்டத்தின் கவனத்துக்கும் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. இதனையடுத்து பயனாளிகள் தெரிவை மீளாய்வுசெய்யுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.**

இதற்கிடையில் சில பிரதேச செயலர் பிரிவுகளில் பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்ட சிலரின் வீடுகளுக்கான அடிக்கல் உள்ளூர் அரசியல்வாதியால் நடுகைசெய்யப்பட்டுள்ளது. ஆனாலும், வீட்டுத்திட்டத்தை மேற்கொண்டு முன்நகர்த்த வேண்டாம் எனவும், பயனாளிகள் பட்டியல் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் அதனைத் தொடருமாறும் கடுமையான அறிவுறுத்தல் மாவட்டச் செயலருக்கு வழங்கப்பட்டுள்ளது.


இதனையடுத்து மாவட்டச் செயலரால் சகல பிரதேச செயலர்களுக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜங்க அமைச்சின் நிதியுதவியின் கீழ் இவ்வருடம் யாழ்ப்பாண மாவட்டத்தில் 1 மில்லியன் ரூபா மற்றும் 0.6 மில்லியன் ரூபா பெறுமதியான வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி கிடைத்திருந்தது.

இவ்விடயம் தொடர்பில் மேற்படி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக எம்மால் கடிதங்கள் மூலம் பயனாளிகளின் எண்ணிக்கையும் பயனாளிகளைத் தெரிவுசெய்யும் முறையும் அறியத்தரப்பட்டது. இதன் பிரகாரம் பயனாளிகள் தெரிவு தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இருந்த போதிலும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவர்கள் மற்றும் எனக்கும் தொடர்ச்சியாக பயனாளிகள் தெரிவு தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன.

எனவே அதனைச் சீர்செய்வதற்கு பின்வரும் அறிவுறுத்தல்களை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

1. மாவட்ட செயலகத்தால் தங்கள் பிரதேச செயலக பிரிவுக்கு ஒதுக்கீடுசெய்யப்பட்ட பயனாளிகள் எண்ணிக்கைக்கமைய தங்களால் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் பெயர் விவரங்களை, தமிழ் மொழியில் உரிய முழுமையான புள்ளியிடல் திட்டத்துடன் பிரதேச செயலகம், இத்திட்டத்துடன் தொடர்பட்ட சகல கிராம அலுவலர் அலுவலகங்கள் மற்றும் கிராம மட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகங்களில் நாளையிலிருந்து எதிர்வரும் 12ஆம் திகதி வரை ஏ3 தாளில் காட்சிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(அட்டவணை 1)



2. ரூபா 1 மில்லியன் மற்றும் ரூபா 0.6 மில்லியன் பெறுமதியான வீடமைப்பு திட்ட பயனாளிகள் பட்டியலை தனித் தனியாக காட்சிப்படுத்தவும்.


3. காட்சிப்படுத்தலில் அமைச்சால் வழங்கப்பட்ட பயனாளி தெரிவு தொடர்பான அறிவுறுத்தல் மற்றும் புள்ளியிடல் முறைகளையும் காட்சிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(அட்டவணை 2)




4. இப் பயனாளி தெரிவுகள் தொடர்பில் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் இது தொடர்பான மேன்முறையீட்டை பிரதேச செயலகத்துக்கு சமர்ப்பிக்க, இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரியை காட்சிப்படுத்தி இதற்கமைவாக முறையீடுகளை தயாரித்து பூரணப்படுத்தி வழங்க அறிவுறுத்தல் வழங்கவும். மேன்முறையீட்டு விண்ணப்பதாரி தொடர்பில் இரகசியதன்மை பேணுவதை பிரதேச செயலகம் உறுதிப்படுத்த வேண்டும்

(அட்டவணை 3)



5. கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகளை எதிர்வரும் 13ஆம் திகதியிலி ருந்து 16ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பிரதேச மட்ட மீளாய்வுக்குழு வால் முறைப்பாடுகள் ஆராயப்பட்டு குறிப்பிட்ட முறையீட்டாளருக்கு தெரிவு செய்யப்பட்டமை அல்லது முன்னுரி மைப்படுத்த முடியாமை தொடர்பில் இத்துடன் இணைக்கப்பட்ட படிவத்துக்கமைய தெரியப்படுத்தவும்.

(அட்டவணை 4)



6. முறையீடுகளுக்குப் பின்னர் இற்றைப்படுத்தப்பட்ட பயனாளிகள் பட்டியலை மீண்டும் பிரதேச செயலகம், கிராம அலுவலர் அலுவலகம் மற்றும் கிராம மட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகங்களில் உரிய புள்ளியிடல் திட்டத்துடன் காட்சிப்படுத்துவதுடன் இப்பட்டியலை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

7. பிரதேச மட்ட மீளாய்வுக்குழுவின் தீர்மானத்தில் திருப்தியற்றவர்கள் பிரதேச மட்ட மீளாய்வுக்குழுவின் தீர்மானப்பிரதியுடன் (அட்டவணை 5) மாவட்டச் செயலகத்துக்கு எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் மேன்முறையீடு செய்யுமாறு அறிவுறுத்தல் வழங்கவும் - என்றுள்ளது. இந்தக் கடிதத்தின் பிரதியை யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர்களுக்கு மாவட்டச் செயலர் க.மகேசன் அனுப்பி வைத்துள்ளார். (ஒ.5,319)

# கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டோர் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் கைது

## முன்னாள் எம்.பிக்கும் மறியல்

கொழும்பு, ஜூலை 5

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட குற்றச்சாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமந்த வித்யாரத்ன, அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன உள்ளிட்ட ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி பண்டாரவளை, பொரலந்தை பிரதேசத்தில் இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ-இ)

# சி.ஐ.ஏ. இன் உறுப்பினர் இலங்கையில் இருந்தாரா?

கொழும்பு, ஜூலை 5

அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ.இன் உறுப்பினர் ஒருவர் கடந்த நான்கு மாதங்களாக இலங்கையில் தலைமறைவாக இருந்தார் என்று குற்றம் சாட்டப்படுகின்றது. அவர் பற்றிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதும், அந்த நபர், ருமேனியாவுக்குத் தப்பிச்சென்றுள்ளார் என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. அவர் மியன்மாரில் இருந்து சுற்றுலாப் பயணி என்ற போர்வையில் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளார் என்று தெரியவருகிறது. அத்துடன் அவரிடம் இரண்டு கடவுச்சீட்டுக்கள் உள்ளமையும் தெரியவந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவர்கள் - தாதியர்கள் முரண்பாடு மேலும் வலுக்கிறது

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்க செயலருக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்ய நடவடிக்கை

**கொழும்பு, ஜூலை 5**

**தாதியர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டமையை விமர்சிக்கும் மருத்துவர்களின் சம்பளம் 2 லட்சம் ரூபா. அவர்களுக்கு ஏனைய கொடுப்பனவுகளுடன் சேர்ந்து 4 லட்சம் ரூபா கிடைக்கப்பெறுகின்றது. ஜனாதிபதி தனக்குக்கூட இவ்வாறான சம்பளம் கிடைப்பதில்லை என்று கூறினார். இந்த நிலையில் எமது வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பில் தவறான விமர்சனங்களை முன்வைத்தமைக்காக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலருக்கு எதிராக் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம்.**

இவ்வாறு பொதுச்சேவை தாதியர் பிரிவு சங்கத்தின் தலைவரும் அபயராம விகாரையின் விகாராதிபதியுமான முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

தாதியர்கள் மேற்கொண்ட சுகவீன விடுமுறைப் போராட்டத்தையடுத்து அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார். அதனை நடைமுறைப்படுத்தினால் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கும் என்று தெரிவித்திருந்த நிலையிலேயே ஆனந்த தேரர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தாதியர்கள் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட வேலை நிறுத்தர் போராட்டம் தொடர்பில் தவறாக விமர்சித்தமைக்காக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் மருத்துவர் நவீன் டீ சொய்சாவிடம் 10 கோடி ரூபா இழப்பீடு கோரி வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம்.

அவர்கள் (அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்) இதற்கு முன்னர் எவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள் என்பதை நாம் அறிவோம். கண்ணாடி வீடுகளுக்குள் இருந்துகொண்டு கல்லால் தாக்குவதற்கு தயாராக வேண்டாம் என்று நாம் அவரிடம் தெரிவிக்கின்றோம்.

தாதியர்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்துவதற்காகவே அவர்களும் தெரிந்தே நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்காமல் இருந்தனர். தாதியர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டதை விமர்சிக்கும் சில மருத்துவர்களின் சம்பளம் சுமார் 2 லட்சம் ரூபா. ஏனைய கொடுப்பனவுகளுடன் இணைக்கும் போது அவர்களுக்கு 4 இலட்சம் ரூபா சம்பளம் கிடைக்கப்பெறும். இந்த தரவுகளை ஜனாதிபதியிடம் காண்பித்த போது அவர் தனக்கு கூட இவ்வளவு சம்பளம் இல்லை என்று ஆச்சரியமடைந்தார். தம்மீது குறைபாடுகளை வைத்துக் கொண்டு ஏனையோரை விமர்சிக்க வேண்டாம். தாதியர் சங்கங்களின் போராட்டங்களில் தலையிடுவதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு என்ன உரிமை இருக்கிறது ? ஏதேனுமொரு தொழிற்சங்கம் போராடி அதன் உரிமையை வென்றெடுக்கும்போது அதனை நாம் ஒருபோதும் எதிர்ப்பதற்கு பழக்கப்படவில்லை. சிறந்த மருத்துவர்கள் எவரும் இவ்வாறு செயற்படமாட்டார்கள்-என்றார். (ஒ.இ)



## இலங்கையர்களுக்கு எமிரேட்ஸ் கதவடைப்பு

கொழும்பு, ஜூலை 5

சர்வதேச விமான சேவையான எமிரேட்ஸ் இலங்கையர்களை ஐக்கிய அரச இராச்சியத்துக்கு அழைத்துச்செல்வதைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதிவரை இது நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனோத் தொற்று நிலைமையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, இலங்கையுடன் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்தும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு பயணிகளை அழைத்துசெல்வதையும் எமிரேட்ஸ் நிறுத்தியுள்ளது. (எ-இ)

## ஒரு மில்லியன் தடுப்பூசி நாட்டை வந்தடைவு

கொழும்பு.ஜூலை 5

சீனாவின் மேலும் ஒரு மில்லியன் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் நேற்றுக் காலை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன.

இந்தத் தடுப்பூசிகள் சீனாவின் பீஜிங்கில் இருந்து இலங்கை விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை ஒரு மில்லியன் தடுப்பூசிகள் எடுத்து வரப்பட்டிருந்தன. இதற்கமைய இதுவரை 5.1 மில்லியன் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (ஐ-இ)

# நோயாளர் நலன்கருதி நீதிமன்றை நாடுவோம்

*தாதிய சங்கத்தினருக்கு இதைத்தான் பிரதிப் பணிப்பாளர் கூறினார்*

யாழ்ப்பாணம், ஜூலை 5

நோயாளர் நலன்கருதி நாங்கள் நீதிமன்றின் உதவியை நாடவேண்டியிருக்கும் என்றே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தாதிய தொழிற்சங்கத்தினருக்கு பிரதிப் பணிப்பாளர் கூறினார். அவர்களை அச்சுறுத்தவில்லை.

தாதிய தொழிற்சங்கத்தினரை தேவையேற்படின் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறும் அறிவுறுத்தியுள்ளோம். இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் எஸ்.சிறிபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

தாதியர் தொழிற்சங்க நடவடிக்கையை தடுக்கும் வகையிலும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அரச தாதி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலரை அச்சுறுத்தும் வகையிலும் மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் நடந்து கொண்டுள்ளார் என தாதிய உத்தியோகத்தர் சங்கம் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தது.

இது தொடர்பில் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் தெரிவிக்கையில்,

ஆளணிப் பற்றாக்குறைக்கு மத்தியில் போதனா மருத்துவமனை தாதியர்கள் நோயாளர்களுக்கு நிறைவான சேவைகளை வழங்குகின்றனர்.

கடந்த ஒரு மாதமாக தாதிய உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தின் தாய்ச் சங்கத்தால் அறிவிக்கப்பட்ட தொழிற்சங்கப் போராட்டத்துக்கு அமைவாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தாதிய உத்தியோகத்தர்கள் கொரோனாத் தொற்றைக் கண்டறிவதற்கான பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் சோதனைகளிலிருந்து விலகியிருந்தனர்.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் சோதனைகளை மேற்கொள்ளுமாறு தாதிய உத்தியோகத்தர்களை மருத்துவமனை நிர்வாகம் கேட்டுக் கொண்டது.

ஆனாலும் தாதிய தொழிற்சங்கத்தினர் இதற்கு மறுப்புத் தெரிவித்தனர். அத்துடன் தாமாக முன்வந்து பரிசோதனைகளை மேற்கொண்ட தாதிய உத்தியோகத்தர்களை தடுக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட உரையாடலின்போது பிரதிப் பணிப்பாளரால் தேவையேற்பட்டால் நோயாளர் நலன்கருதி நாங்கள் நீதிமன்றத்தின் உதவியை நாடவேண்டி இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் பிரதிப் பணிப்பாளரால் எவரும் அச்சுறுத்தப்படவில்லை- என்றார். (ஓ.5)

## வழிகாட்டல்கள் தயாரான பின்னரே பாடசாலை ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 5

நூறு மாணவர்களுக்குக் குறைவான பாடசாலைகளை இந்த மாதத்துக்கு மீண்டும் ஆரம்பிக்கும் திட்டம், வழிகாட்டிகள், ஆலோசனைகள் தயாரிக்கப்பட்டு, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஆற்றல் உறுதிசெய்யப்பட்ட பின்னரே ஆரம்பிக்கப் படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பிரதி சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு சுகாதார அமைச்சில் பாடசாலை சுகாதாரப் பிரிவு உண்டு. அதேபோன்று பொதுமக்கள் சுகாதார சேவைகள் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகமும் உள்ளார். இவர்களுடன் கல்வி அமைச்சு தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றது- என்றார். (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவும், கோத்தாவும் போரைமுடிக்க பொருளாதாரத்தை சுமந்தவரே பஸில்!

## அவரின் வருகை நிச்சயம் மாற்றம் தரும் அமைச்சர் ரோஹித நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 5

"2005 இல் ஜனாதிபதியாக பதவியேற்ற மஹிந்த ராஜபக்சவும், பாதுகாப்புச் செயலாளராக செயற்பட்ட கோத்தாபய ராஜபக்சவும் போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கையை முன்னெடுக்கவில்லை. பஸில் ராஜபக்சவே பொருளாதாரப் போரை முடிவுக்கு கொண்டு வந்தார். எனவே, பஸிலின் வருகையால் நிச்சயம் மாற்றம் ஏற்படும்." என்று அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, பஸில் ராஜபக்சவின் நாடாளுமன்ற வருகை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசு 'பெயில்' என விமர்சிப்பவர்கள் அதனை உரிய ஆதாரங்களுடன் நிரூபிக்கத் தவறுகின்றனர். எமது அரசு தோல்வியடையவில்லை. நாம் நிச்சயம் 'பாஸ்'. தற்போதைய சூழ்நிலையில் கடந்த அரசு இருந்திருந்தால் தற்போது உரையாற்றுவதற்கு நானும், கேள்வி கேட்பதற்கு நீங்களும் உயிருடன் இருந்திருப்போமா என்றுகூட தெரியாது. இன்று முழு உலகமும் நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ளது. கொரோனாவையும் கட்டுப்படுத்திக்கொண்டு எமது அரசு முன்னோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசை உருவாக்கியவர்களில் பஸில் ராஜபக்சவும் ஒருவர். அப்படி இருந்தும் அவர் நாடாளுமன்றம் வரவில்லை. கட்சிப்பணிகளை முன்னெடுத்தார். ஜனாதிபதியால் வழங்கப்பட்ட செயலணி பொறுப்பையும் நிறைவேற்றி வந்தார். எனவே, முன்னோக்கிச் செல்வதற்கு பஸிலின் மதிநுட்பம் எமக்கு அவசியம். அவர் திறமையானவர். அதனால் தான் அவரை நாடாளுமன்றம் வந்து, அமைச்சு பதவியை ஏற்குமாறு நாம் கோரினோம். இந்தமுறை அந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்.

இந்த வாரமளவில் அவர் நாடாளுமன்றம் வருவார். அமைச்சராகவும் பதவியேற்பார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு, பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு மற்றும் எமது அரசுக்கு பக்கபலமாக இருப்பார்.

2005 ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்சவும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக கோத்தபாய ராஜபக்சவும் போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கையை ஆரம்பிக்கையில் பொருளாதாரத்தை பஸில் ராஜபக்சவே சிறப்பாக வழிநடத்தினார். போருக்கு பல பில்லியன்கள், ரில்லியன்களை செலவழிக்க வேண்டியேற்பட்டது. இவ்வாறு பணம் சென்றாலும் மக்களின் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் அவர் விழவிடவில்லை. பொருளாதாரப் போரை வெற்றிகொண்டார். பஸிலின் வருகை எதிரணிக்கும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. பஸில் என்பவர் வேலை செய்யக்கூடிய சிறந்த தலைவர் என்பதை எதிரணியினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்" - என்றார்.

(த-44)

# பஸிலை சீண்டிய சு.கவுக்கு 'வேட்டு' வைத்தது மொட்டு

## அரசுக்குள் இருப்பதானால் துள்ளக்கூடாது என்ற தொனியிலும் எச்சரிக்கை விடுப்பு!!

**கொழும்பு, ஜூலை 5**

**"அங்கும் இங்குமாக தஞ்சம் புகுந்து அரசியல் நடத்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி கிடைக்காததாலேயே பஸில் ராஜபக்சவை விமர்சிக்கும் அரசியலை முன்னெடுத்துவருகின்றார். இணைந்து பயணிப்பதானால் கூட்டு பொறுப்பு என்னவென்பதை அவரின் கட்சி உணரவேண்டும்."**



இவ்வாறு கடும் சீற்றத்துடன் பதிலடி கொடுத்துள்ளது அரச கூட்டணியின் தலைமைக்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன.

"பஸில் ராஜபக்ச மற்றும் பி.பீ. ஜயசுந்தர ஆகியோரின் நிகழ்ச்சி நிரலுக்கமையவே தற்போதைய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது. இது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் அமைச்சரவை அல்ல. சட்டிமுட்டி, பத்திக் என நகைச்சுவைத்தனமாக இராஜாங்க அமைச்சுகளைக்கூட பஸிலே உருவாக்கினார். அவர் நாடாளுமன்றம் வருவதால் மாற்றம் ஏதும் ஏற்படப் போவதில்லை." என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர கருத்து வெளியிட்டிருந்தார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் மொட்டுக் கட்சி நேற்று விசேட ஊடகவியலாளர் மாநாடொன்றை ஏற்பாடு செய்திருந்தது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் ரோகித அபேகுணவர்த்தன மேற்கண்டவாறு விளாசித் தள்ளினார். அவர் கூறியவை வருமாறு,

"பஸில் ராஜபக்சதான் அமைச்சரவையை உருவாக்கினார் என்பது உட்பட மேலும் சில குற்றச்சாட்டுகளை தயாசிறி ஜயசேகர முன்வைத்துள்ளார். தயாசிறி ஜயசேகர கடந்த ஆட்சியின்போது அமைச்சரவையில் விளையாட்டுத்துறை அமைச்சு பதவியை வகித்தவர். இதன்போது விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கும், தவறான திசையில் பயணித்த அரசை நல்வழிப்படுத்துவதற்கும் அவர் முன்னெடுத்த திட்டங்கள் எவை என கேட்க விரும்புகின்றோம். அப்போது எதுவும் செய்ய முடியாமல் மௌனமாக இருந்தவரே இன்றுஅறிவிப்புகளைவிடுக்கின்றார். 2015 ஜனவரி 8 ஆம் திகதிவரை மஹிந்த ராஜபக்சவின் பக்கம் இருந்தார். 2015 ஜனவரி 9 ஆம் திகதி காலை மைத்திரிபக்கம் சென்றுவிட்டார். அமைச்சர் பீரிஸின் செயலாளராக இருந்த தயாசிறி அதன்பின்னர் சுதந்திரக் கட்சியில் இணைந்தார். ஐக்கிய தேசியக் கட்சிக்கு சென்றார். மீண்டும் சுதந்திரக் கட்சிக்கு வந்தார். இவ்வாறானவர்களின் அரசியல் என்னவென்பது மக்களுக்கு தெரியும். தமது இயலாமையை மூடி மறைக்கவே பிறர்மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

கடந்த பொதுத்தேர்தலில் களுத்துறை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் சுதந்திரக் கட்சி தனித்து போட்டியிட்டது. களுத்துறை மாவட்டத்தில் 10 ஆயிரத்து 977 வாக்குகளும், நுவரெலியா மாவட்டத்தில் 6 ஆயிரத்து 277 வாக்குகளுமே கிடைக்கப்பெற்றன. சிலவேளை அனைத்து மாவட்டங்களிலும் அந்தக் கட்சி தனித்து போட்டியிட்டிருந்தால் ஐ.தே.கவுக்குபோன்று தேசியப்பட்டியல் ஊடாக மட்டுமே ஓர் ஆசனம் கிடைத்திருக்கும்.

சுதந்திரக் கட்சிக்குள் பிரச்சினையெனில் அரசுக்குள் இருப்பதாக இருந்தால் பிரச்சினையை உள்ளே பேசித் தீர்க்கலாம். அதனை விடுத்து வெளியில் விமர்சிப்பது ஏற்புடையது அல்ல. சிலருக்கு குணப்படுத்த முடியாத நோய் உள்ளது. அதில் ஒருவர்தான் விஜயதாச ராஜபக்ச. அமைச்சு பதவி இல்லாவிட்டால் அவரால் இருக்கமுடியாது. இரண்டாவது நபர்தான் தயாசிறி.

பஸில் ராஜபக்சவென்பவர் இந்த நாட்டில் பலம்பொருந்திய கட்சியைக் கட்டியெழுப்பியவர். பொருளாதாரப் போரை வென்றவர். அவரின் வருகை நிச்சயம் மாற்றத்தைத் தரும். பஸில், வேலை செய்யும் தலைவர் என்பது எதிரணிக்குக் கூட தெரியும். பஸிலை அரசியல் ரீதியில் விமர்சித்த தால்தான் தயாசிறியை விமர்சிக்க வேண்டிவந்தது. இணைந்து பயணிக்க நாம் தயார். ஆனால் இணைந்து பயணிப்பதாக இருந்தால் கூட்டுப் பொறுப்பை உணருமாறு வலியுறுத்துகின்றோம்." - என்றார்.

(த-44)

# பொருளாதாரத்தை மேம்படுத்த அனைவரும் ஒத்துழைக்கவும்

## இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 5

பொருளாதாரத்தை மேம்படுத்த, ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு சகலரிடமும் கேட்டுக்கொள்கின்றேன் என்று கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமெனில் நாட்டை முடக்கி வைத்திருக்க முடியாது. சுகாதார வழிகாட்டல்களுக்கமைய நாட்டை முடக்காமல் நடத்திச் செல்ல வேண்டும். 22 மில்லியன் மக்களதும் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமெனில் சுற்றுலாப்பயணிகள் வருகைதர வேண்டும் என்பதையும் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

நல்லாட்சியில் காணப்பட்ட குறைபாடுகளால் நாடு 5 ஆண்டுகள் பின்னோக்கி சென்றது. மேலும் இரண்டு வருடங்கள் கொவிட் பரவல். எனினும் அது எமக்கு பிரச்சினையல்ல. யுத்த காலத்தில் நமக்காக நாம் ஒன்றிணைந்ததைப் போன்று பொருளாதாரத்தை மேம்படுத்த, ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு சகலரிடமும் கேட்டுக் கொள்கின்றேன்.

சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் அனுமதித்துள்ளமை தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் சுற்றுலாத்துறை இயங்காமல், முதலீடுகள் இடம்பெறாமல், அபிவிருத்திகளை முன்னெடுக்காமல் நாட்டை முடக்கி வைத்திருந்தால் ரூபாவை எம்மால் பாதுகாக்க முடியாது - என்றார்.

(ஐ-இ)

# வீதி விபத்தில் இருவர் காயம்

கிளிநொச்சி,ஜூலை 5

வீதி சீரமைப்புக்கு குவிக்கப்பட்டிருந்த சல்லியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த இருவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் முல்லைத்தீவு திருமுறிகண்டி அக்கராயன் வீதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

18 மற்றும் 11 வயதுடைய சகோதரர்களே விபத்தில் காயமடைந்தனர். இதில் ஒருவர் கிளிநொச்சி பொது மருத்துவமனையிலும், மற்றையவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தல் குற்றச்சாட்டில் இராணுவத்தினர் கைது!

**கொழும்பு, ஜூலை 5**

**நுரைச்சோலையில் ஒருவரைக் கடத்தித்தாக்கினர் என்ற குற்றச்சாட்டில் நான்கு இராணுவத்தினர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**



பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய்களுக்குத் தொடர்பிருப்பது கண்டறியப்பட்டதை அடுத்து, இராணுவத்தினருக்குத் தெரியப்படுத்தினர் என்றும், இராணுவத்தினர் சம்பந்தப்பட்ட இராணுவச் சிப்பாய்களைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தனிப்பட்ட தகராறு காரணமாக பொதுமகன் ஒருவரைக் கடத்தித் தாக்குதல் நடத்தப்பட்டது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பான முறைப்பாடு கடந்த 30ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றும், கைதுசெய்யப்பட்டவர்கள் புத்தளம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-இ)

## பயணக் கட்டுப்பாட்டை மீறிய சாரதியும், நடத்துநரும் கைது!

கொழும்பு, ஜூலை 5

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை மீறிப் பயணித்த குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மதவாச்சி பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

போலி ஆவணங்களைக் காட்டி கொழும்புக்குச் செல்வதற்கு இவர்கள் முயற்சித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## மட்பாண்ட உற்பத்திக்காக நடைமுறைகளில் மாற்றம்

கொழும்பு, ஜூலை 5

மாதத்துக்கு 3 கியூப் கணிமண் கொண்டுசெல்வதற்கு உரிமம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று கூறப்படுகின்றது. இது தொடர்பாக பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தகவலை தளபாடங்கள் மற்றும் ஊரக கைத்தொழில் அமைச்சின் செயலாளர் விஜித் பண்டாரநாயக்க தெரிவித்தார்.

முன்னதாக, ஒன்றுக்கு மேற்பட்ட களிமண் கன சதுரத்தை கொண்டுசெல்ல புவிச் சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் ஒப்புதல் தேவைப்பட்டது. அந்தச் சட்டத்தின் காரணமாக மட்பாண்ட உற்பத்தியாளர்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து, இந்தப் புதிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று விஜித பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

மட்பாண்ட உற்பத்தியாளர்கள் மாதத்துக்கு 6களிமண் க்யூப்ஸ் கொண்டுசெல்ல அனுமதிப்பது தொடர்பான விவாதங்கள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

## முடக்க நிலைமையால் வருமானங்கள் இழப்பு!

### *பாடசாலை வாகன சேவை உரிமையாளர் சங்கம் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஜூலை 5

பல மாதங்களாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையால் தங்களது வருமானம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று பாடசாலை வாகன சேவை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடன்கள் மற்றும் வாகனங்களுக்கான குத்தகை தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்த முடியாது மிக இக்கட்டான நிலைமையில் அவர்கள் உள்ளனர் என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, மேல் மாகாணத்தில் நடுத்தர நிகழ்வுகளை ஒழுங்குசெய்யும் நிறுவனங்களின் அமைப்பும் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. (எ-இ)

## சிறுமி துஷ்பிரயோகம்: அவருடைய தாயாரும் சந்தேகநபரும் கைது

கொழும்பு, ஜூலை 5

கொழும்பைச் சேர்ந்த 15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் கைதுசெய்துள்ளது. அத்துடன், சந்தேகநபருக்கு உதவிசெய்தார் என்ற குற்றச்சாட்டில், சிறுமியின் தாயாரும் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் தெரிவித்தது.

தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையத்தின் சிறப்பு புலனாய்வு பிரிவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் ஜூலை 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு தலைமை நீதிவான் மன்று உத்தரவிட்டுள்ளது என்று ஆணையத்தின் தலைவர் பேராசிரியர் முதித விதானபதிரண - தெரிவித்தார். (த-இ)

## விதிமுறைகளை மீறிய 417 பேர் கைதாகினர்



கொழும்பு, ஜூலை 5

தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 417 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 47 ஆயிரத்து 240 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தார்.

அதேவேளை, தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கம்பளையில் நேற்றுமுன்தினம் 112 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 55 பேர் கண்டியிலும், 45 பேர் மாத்தளையிலும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மேற்கு மாகாணத்துக்குள் நுழையும், வெளியேறும் 14 வழிகளில் நேற்றுமுன்தினம் 7 ஆயிரத்து 62 வாகனங்கள் சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளன. மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாட்டை மீறிய 165 பேர் திருப்பி அனுப்பப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## சந்திரிகா, குமாரவெல்கம கட்சிக்குத் திரும்பவேண்டும்

### *சுதந்திரக் கட்சி பகிரங்க அழைப்பு*

கொழும்பு, ஜூலை 5


முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் குமாரவெல்கம ஆகியோரை கட்சிக்கு திரும்புமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கட்சியில் இருந்த கட்சி ஆர்வலர்களை மீண்டும் கொண்டு வருவதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் வலுப்படுத்த முடியும் என்ற பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தித் தொடர்பாளர், கட்சியில் தீவிரமாக செயற்பட்டு வந்தவர்களை மீண்டும் கட்சிக்கு அழைத்துவர திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார்.

இதனிடையே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் மஹிந்த அமரவீர போன்றவர்களுக்கு கட்சி திறந்திருக்கும் என்று குறிப்பிட்டார். கட்சியில் இருந்த அனைவரும் மீண்டும் கட்சியில் இணைந்துக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)

## கொரோனா தொற்று: சில பகுதிகள் முடக்கம்



கொழும்பு, ஜூலை 5

கண்டி, மாவட்டத்தின் கட்டுகஸ்தோட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யட்டிவாவல கிராம அலுவலர் பிரிவில் சாகரதெனிய தோட்டம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 6 மணி முதல் இந்தத் தோட்டம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு கிராம அலுவலர் பிரிவுகளும், நுவரெலியா மாவட்டத்தில் இரு கிராம அலுவலர் பிரிவுகளும், களுத்துறை மாவட்டத்தில் ஒரு கிராம அலுவலர் பிரிவும் நேற்றுக்காலை முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா தொழிலகத்தின் நிறுவுநர் நடராஜா வின் 6ஆவது ஆண்டு சிரார்த்த தினத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரை வெளியாகின்றது.

# யாழ்ப்பாணத்தின் அடையாளம் 'அண்ணா' நடராஜா



■ சமூகன்

யாழ்ப்பாணப் பொருளாதாரத்தின் ஆணிவேர்களில் ஒன்றெனக் கருதப்பட்ட பனையின் முக்கியத்துவத்தை உணர்ந்து உற்பத்தியை ஊக்குவித்தவர் என்று மில்க்வைற் சோப் தொழிற்சாலையின் நிறுவுநர் மு.கனகராஜா இன்றும் போற்றப்படுகிறார். பலருக்கு வாழ்வாதாரத்தைத் தரவல்ல ஒரு தொழில் நிறுவனமாக மட்டுமல்லாது ஒரு சமூகப் பொறுப்புள்ள நிறுவனமாகவும் முத்திரை பதித்தது மில்க்வைற்.

அதுபோல அன்றைய காலகட்டத்தில் தன்னிடம் பணியாற்றிய ஒருவரை ஊக்குவித்து 'அண்ணா தொழிலகம்' என்ற ஒரு தொழில் நிறுவனத்தை ஆரம்பித்துக் கொடுத்து அதனூடாகவும் பலருக்குத் தொழில் வாய்ப்பை வழங்குவதற்கு உறுதுணையாகவும் மில்க்வைற் கனகராஜா இருந்திருக்கிறார். அவருக்கு தொழிலைத் தொடக்கி வைத்ததோடு மட்டுமல்லாது தான் முன்னெடுக்கும் சமூகப் பொறுப்புள்ள பனைசார் பணிகளில் அவரையும் பங்கெடுக்கச் செய்தவர்.

இன்று தமிழர் தாயகத்தில் மிகப்பெரிய தொழில் நிறுவனமாக மட்டுமல்லாது பல கிளைகளை நிறுவிப் பலருக்குத் தொழில்வாய்ப்பை வழங்கிவரும் உற்பத்தி நிறுவனமாகவும் 'அண்ணா தொழிலகம்' காணப்படுகிறது. அந்த நிறுவனத்தின் ஆரம்பகர்த்தா எனப் போற்றப்படும் அதிபர் பொ.நடராஜாவின் ஆறாவது சிரார்த்த தினம் இன்றாகும்.

1959ஆம் ஆண்டு யாழ். மண்ணில் தொடங்கப்பட்ட அண்ணா தொழிலகம், தமிழர்களின் வாழ்வியலோடு ஒன்றித்து போரையும் எதிர்கொண்டது. இதனால் இடப்பெயர்வுகளையும் சந்தித்தது. வியாபார நிறுவனம் என்பதைத்தாண்டி அன்றைய சூழலில் மக்களின் பசியைப் போக்கிய ஓர் தொழிலமாகவும் செயற்பட்டது. மக்களின் இடர்களைக் களைவதில் பெருந்தொண்டாற்றியது.

இதுவரை அரச மற்றும் தனியார் தொழில்துறைசார் விருதுகள் பலவற்றைத் தன்னகப்படுத்தியதோடு மட்டுமல்லாது ஒரு சிறந்த தொழில் தருநர் என்ற பாராட்டையும் பெற்ற அண்ணா தொழிலகம், இன்று பரந்து விரிந்து இருந்தாலும் ஆரம்பத்தில் ஒரு குடிசைக் கைத்தொழிலாகவே தொடங்கப்பட்டது. நடராசாவின் குடும்ப அங்கத்தவர்களே ஆரம்பத் தொழிலாளர்கள். கால ஓட்டத்தில் மனித வளங்களை மட்டும் கொண்டு எளிய முறையில் தயாரிக்கப்பட்ட தமது தயாரிப்புளை துவிச்சக்கர வண்டியில் நடராஜாவே கடைகளுக்கு எடுத்துச் சென்று சந்தைப்படுத்தியும் வந்தார். தற்போது நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டதொரு மிகப் பெரிய நிறுவனமாக செயற்பட்டுவரும் அண்ணா தொழிலகம் விவசாயத்துறையிலும் மிகப்பெரியதோர் வளர்ச்சி கண்டதொரு நிறுவனமாகக் காணப்படுகிறது.

ஆடு, மாடு, கோழி வளர்ப்பு செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவதோடு அத் துறைசார்ந்த பலருக்கு முன்மாதிரியாகவும் இருந்து வருகிறது. அண்ணா தொழிலகத்தின் மிகப் பிரதான அடையாளமாக இருப்பது கோப்பித் தூள். இந்தத் தரணியெங்கும் பரவிவாழும் தமிழ் மக்கள் அனைவரையும் இப்போதும் சுண்டி இழுக்கும் அண்ணா கோப்பி.

தனித்து வர்த்தக நோக்கோடு இல்லாது மக்கள் நலனையும் சிந்தித்ததால் 'அண்ணா தொழிலகம்' இன்றும் பெயர் சொல்லும் நிறுவனமாக மிளிர்கின்றது. ■

---

## முல்லையில் நாளைய தினம் குருதிக் கொடை

முல்லைத்தீவு, ஜூலை 5

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மின்னியலாளர் ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நாளை முல்லைத்தீவு இந்து தமிழ் கலவன் பாடசாலையில் காலை 9 மணி தொடக்கம் குருதிக் கொடை நிகழ்வு ஒன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

உதிரம் கொடுத்து உயிர் காப்போம் என்ற தொனிப்பொருளில் 11 ஆவது முறையாக இந்தக் குருதிக் கொடை நிகழ்வு நடைபெறவுள்ளது. லயன்ஸ் கழகம், சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் எனப் பல இணைந்து இந்த நிகழ்வை நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-19)

# முழங்காவில் மருத்துவமனை அபிவிருத்தி செய்யப்படவேண்டும்

## பூநகரி பிரதேச உறுப்பினர் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 5

கிளிநொச்சி முழங்காவில் ஆதார மருத்துவமனை அடிப்படை வசதிகளற்ற நிலையில் காணப்படுகின்றது என்று பூநகரி பிரதேச சபையின் முழங்காவில் வட்டார உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பூநகரி பிரதேசத்தில் மூன்று மருத்துவமனைகள் உள்ளன. முழங்காவில் ஆதார மருத்துவமனையில் கட்டட வசதிகள் போதிய அளவு இல்லை. ஆய்வு கூடவசதி இல்லை. மருத்துவ உபகரணங்கள் இல்லை, பிரசவ அறை இல்லை, குளிரூட்டப்பட்ட பிண அறை இல்லை. உள்ளக வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. குருதி வங்கி இல்லை, மருத்துவர் பற்றாக்குறை, தாதியர் பற்றாக்குறை, நிர்வாக உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் பற்றாக்குறை போன்ற பல குறைபாடுகள் காணப்படுகின்றன.

மகப்பேறுக்கு கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கே கர்ப்பிணிகள் அனுப்பப்படுகிறார்கள், சாதாரண நோய்களுக்குக் கூட நோயாளர்கள் கிளிநொச்சிக்கு மாற்றம் செய்யப்படுகிறார்கள். முழங்காவில், வெள்ளாங்குளம், பாலியாறு, தேவன்பிட்டி, மூன்றாம்பிட்டி, நாச்சிக்குடா, குமுழமுனை, கரியாலைநாகபடுவான், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, கிராஞ்சி, வேரவில், பொன்னாவெளி, வலைப்பாடு, மற்றும் பாலாவி ஆகிய பகுதிகளில் இருந்து நோயாளர்கள் இவ் மருத்துவமனைக்கு வருகின்றார்கள். சுமார் 25 ஆயிரம் மக்களுக்கு ஆதாரமாகவுள்ள இந்த மருத்துவமனை உடனடியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். வடமாகாண சுகாதார அமைச்சு மருத்துவமனையை அபிவிருத்தி செய்வதில் அசமந்தப்போக்குடன் செயற்படுகின்றது - என்றார். (ப-13)

## நியமனம்

யாழ்ப்பாணம்.ஜூலை 5

வடக்கு மாகாண உதவிப் பிரதம செயலாராக அன்ரனி அனற் நியமிக்கப்பட்டு தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். இவர் இதற்கு முன்னர் யாழ்ப்பாண மாநகர உதவி ஆணையாளராக கடமையாற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

# சிறுவர் துஷ்பிரயோகங்களை அறிந்தால் உடன் முறையிடுக

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பொதுமக்களிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 5

சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் தொடர்பாக உடனடியாக முறையிட வேண்டும் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

துஷ்பிரயோகங்கள் தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 1929 என்ற துரித தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு முறையிட முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களை கண்காணிக்கும் நிறுவனங்களுக்கு 15 வீதமான முறைப்பாடுகளே கிடைக்கின்றன.

தற்போதைய சூழ்நிலையில் வீடுகளிலும் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுகின்றன. இது பற்றிய தகவல்கள் உரிய வகையில் கிடைக்காமை கவலைக்குரிய விடயம் என்று அந்த அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது. சிறுவர்களை துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாப்பது முழுச் சமூகத்தினதும் பொறுப்பாகும். சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய தகவல்களை உரிய தரப்புக்கு வழங்க வேண்டும் என்றும் அந்த அதிகார சபை கோரிக்கை விடுத்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வன்முறைகளுக்கு முடிவில்லையா?

**கொ**ரோனாவோடு காணாமல் போயிருந்த வாள்வெட்டுக் கலாசாரம் மீண்டும் யாழ். குடாநாட்டில் விஸ்வரூபமெடுத்துள்ளது. அண்மைய நாள்களாக தொடர்ச்சியாக வாள்வெட்டுச் சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன. அதிலும் கோண்டாவிலில் பெரும் குழுவாக வந்த வாளேந்திகள், ஸ்ரூடியோ ஒன்றையும், வாகனங்களையும் தீயிட்டதோடு, அங்கிருந்தவர்களை வாள்களால் ருசி பார்த்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இதன்போது ஒரு இளைஞரின் கை துண்டாடப்பட்டு, பின்னர் யாழ். போதனா மருத்துவர்களின் புண்ணியத்தால் பொருத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின் பின்னணி, வாள்வெட்டுக் குழுக்கள் பற்றிய இன்னும் பல அதிர்ச்சித் தகவல்களை வெளிப்படுத்தியிருக்கின்றன. ஏற்கனவே குடாநாட்டில் நன்கறியப்பட்ட ஆவா எனப்படும் வாள்வெட்டுக் கும்பலில் இருந்து பிரிந்து சென்ற சிலர் இன்னொரு வாள்வெட்டுக் குழுவை உருவாக்கியிருக்கிறார்கள். ஆவாவுக்கு போட்டியாக உருவான இந்தக் குழுவினர் தமக்கு 'ஜீ குழு' எனப் பெயரிட்டதோடு, தங்கள் குழுவுக்கென ஒரு பாடலையும் உருவாக்கி சமூகவலைத்தளங்களில் ஒலிபரப்பியுள்ளனர். குறிப்பாக அந்தப் பாடலில் ஆவா குழுவைச் சீண்டும் வகையிலான வரிகள் இருந்ததாகவும், இதனால் ஏற்கனவே 'ஜீ' குழு மீது கோபத்தில் இருந்த ஆவாக்குழுவினர், கோண்டாவிலில் தங்கள் வன்மத்தை தீர்த்துக் கொண்டனர் என்றும் சொல்லப்படுகின்றது. சமூக விரோதச் செயலில் ஈடுபடும் வன்முறைக் குழுவொன்று பகிரங்கமாக இயங்குதல், அதிலிருந்து பிரிந்து சென்று இன்னொரு குழுவை உருவாக்குதல், அதற்கு ஆள்களைச் சேர்த்தல், தங்கள் வன்முறைக் குழுவுக்கு என பாடல்களை உருவாக்குதல் அவற்றை பொதுவெளிகளில் ஒலிபரப்புதல், இரு குழுக்களும் ஏட்டிக்கு போட்டியாக வன்முறைகளில் ஈடுபடுதல், தத்தம் குழு உறுப்பினர்களின் பிறந்ததினங்களுக்கு வாள், கத்தி போன்ற வடிவங்களில் ஐசிங் கேக் வெட்டி கொண்டாடும் படங்களை பேஸ்புக் போன்றவற்றில் பதிவிடுதல் என இந்தக் குழுக்களின் நடவடிக்கைகள் அண்மைக்காலமாக பெருகிக் கொண்டே போகின்றன.

விடுதலைப்புலிகள் பற்றிய பதிவொன்றைப் பேஸ்புக்கில் பதிவிட்டாலோ அல்லது பகிர்ந்தாலோ அடுத்தநொடியே அவர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் அள்ளிப் போகும் பொலிஸார், இப்படியான வன்முறையாளர்கள் சமூக வலைத்தளங்களில் வாளோடும் வேலோடும் புகைப்படங்களைப் பதிவிட்டும் கூட கண்டுகொள்வதில்லை என்பதே மக்களின் ஆதங்கம். வீதிகளில் அவர்கள் ஆயுதங்களோடு சென்றாலும் மறிப்பதில்லை. இப்படி வன்முறைக் குழுக்கள் கட்டவிழ்த்த எருமைமாடுகளாக பகிரங்கமாக அலைந்து திரிவதற்கு முழுமுதற் காரணம் பொலிஸாரின் கையாலாகத்தனமே. ஆரம்பத்திலேயே இவர்களை 'முறையாக கவனித்து' ஒடுக்கியிருந்தால், வாளைத் தொடுவதற்கே அந்த வன்முறையாளிகளின் கை நடுங்கியிருக்கும். ஆனால் இப்போது வாளெடுப்பதே ஒரு வீரமாக அடையாளப்படுத்தப்படும் அவல நிலைக்கு நம் சமூகம் வந்துவிட்டது.

அத்தோடு இந்த வாள்வெட்டுக்காரர்களின் பேஸ்புக் கணக்குகளில் பெரும்பாலான பதிவுகள் அரசாங்கத்தையும், இராணுவத்தையும் புகழ்வதாகவே இருக்கும். எனவே இந்த வாள்வெட்டுக்குழுக்களின் பின்னணியில் அதிகார வர்க்கம் இருப்பதாகவும் பொதுமக்களிடம் பலத்த சந்தேகமுண்டு. அப்படி இந்த வாள்வெட்டுக் குழுக்களை இயக்கும் அதிகார பீடம் தான் பொலிஸாரை நடவடிக்கை எடுக்கவிடாமல் அவர்களின் கைகளைக் கட்டிப்போட்டிருக்கவும் கூடும். இந்த நிலையில் புதிதாக யாழ் மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபராகப் பதவியேற்ற பிரியந்த லியனகே, ஓரளவு நம்பிக்கை தரும் வகையிலான நடவடிக்கைகளை இந்த வாள்வெட்டுக் குழு விடயத்தில் எடுத்திருக்கிறார் என அறியமுடிகின்றது. வன்முறைகளைத் தடுக்க அவர் போட்ட கிடுக்குப்பிடி காரணமாகவே, தாம் சிக்கிவிடுவோமோ என்ற பயத்தில் ஒருதொகை வாள்களை வன்முறையாளர்கள் வீதிகளில் எறிந்துள்ளனர். ஆனால் இதே இறுக்கமான போக்கை யாழ் மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் தொடர்ந்தும் கடைப்பிடித்தால் மாத்திரமே, இந்த வன்முறைக் குழுக்களின் அட்டகாசத்தை அடக்கமுடியும். இல்லாவிட்டால் மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடி என[illegible] தான்.




# கராப்பிட்டிய மருத்துவமனையின் கொவிட் சிகிச்சை பிரிவு மூடப்பட்டது

## அங்கிருந்த தொற்றாளர்களின் வன்முறையால் தாதியர் உட்பட 9 பேருக்கு பரவியது தொற்று

**கொழும்பு, ஜூலை 5**

**கா**லி, கராப்பிட்டிய மருத்துவமனையின் விசேட கொவிட் சிகிச்சை பிரிவு மூடப்பட்டுள்ளது. அங்கு பணியாற்றிய 9 பணியாளர்கள் கொவிட் வைரஸ் தொற்றுக்குள்ளாகியமையால் நேற்றுமுன்தினம் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டு மூடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.



வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் 07 பேர் தாதியர்கள் எனவும் இருவர் ஊழியர் குழுவை சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விசேட கொவிட் சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்ற தொற்றாளர்கள் இருவர் மோசமான முறையில் செயற்பட்டமையால் இவ்வாறு 9 பேர் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று மருத்துவமனையின் சுகாதார ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். குறித்த இரண்டு தொற்றாளர்களும் சிகிச்சைப் பிரிவுக்குள் வன்முறையாகச் செயற்பட்டுள்ளனர்.

இந்த நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு முயற்சித்த தாதி உட்பட சுகாதார ஊழியர்கள் மீது குறித்த தொற்றாளர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலின்போது தாதி மற்றும் ஊழியர்களின் முகக் கவசம் மற்றும் பாதுகாப்பு உடைகளை நீக்கவும் குறித்த தொற்றாளர்கள் இருவரும் முயற்சித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று சில நாள்களின் பின்னர் தாக்குதலுக்குள்ளான தாதி மற்றும் ஏனைய ஊழியர்கள் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இன்று போராட்டம்

வவுனியா, ஜூலை 5

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நடத்திவரும் போராட்டத்தின் 1,600ஆவது நாளை முன்னிட்டு இன்று கவனவீர்ப்பு நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

உறவினர்கள் போராட்டம் நடத்திவரும் இடத்தில் இன்று காலை 11 மணியளவில் இந்தக் கவனவீர்ப்பு நடத்தப்படவுள்ளது. கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைப் பேணி இந்தப் போராட்டம் நடத்தப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியம் ஜிஎஸ்பி வரி சலுகையை பயங்கரவாத சட்டத்தை அகற்ற மட்டுமல்லாமல், அரசியல் தீர்வுக்கும் பயன்படுத்த வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிஎஸ்பி வரிச் சலுகையை நிறுத்துவது பற்றிய பேச்சின் காரணமாக இலங்கை அரசில் ஓர் பதட்டமான சூழ்நிலை காணப்படுவதை இலங்கை அரசின் நடவடிக்கையில் இருந்து நாம் அறியக் கூடியதாகவுள்ளது.

பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட தாயகத்துக்குள் மட்டுமே பாதுகாப்பாக வாழ முடியும் என்பதை கடந்த 74 ஆண்டுகளாக தமிழர்கள் கற்றுக் கொண்டனர் என்று குறித்த பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிகளை அறவிட கடற்கரைக்கு வாருங்கள்

## முல்லை. கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் தெரிவிப்பு

**முல்லைத்தீவு, ஜூலை 5**

**பிரதேச சபைக்கு வருமானம் அதிகரிக்க வேண்டும் என்பதற்காக கடற்றொழிலாளர்கள் மீன்களை முல்லைத்தீவு நகரச் சந்தைக்கு எடுத்துச் செல்ல முடியாது என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் பிறெட்ரிக் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.**

கரைதுறைப்பற்று பிரதேச சபையில் உறுப்பினர் ஒருவர் நகர சந்தைக்கு மீன்கள் கொண்டுவரப்பட்டால் சபைக்கு அதிக வருமானம் கிடைக்கும் எனத் தெரிவித்த கருத்துத் தொடர்பாக கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கடற்றொழிலாளர்கள் கடலில் இருந்து திரும்பி கள்ளப்பாடு வடக்கு, தெற்குக்குரிய பொதுச் சந்தையிலும், சிலாவத்தை மற்றும் தீர்த்தக் கரை ஆகிய பகுதிகளுக்கான தீர்த்தக்கரை பொதுச்சந்தையிலும் தற்போது மீன்களை விற்பனை செய்கின்றார்கள். காரணம் இரண்டரைக் கிலோ மீற்றர் தூரம் வரை கடலில் இருந்து கரைக்குத் திரும்பும் கடற்றொழிலாளர்களால் மீன்களைக் கொண்டுசெல்ல முடியாது. படகு உட்பட கடற்றொழில் உபகரணங்களுக்குப் பாதுகாப்பு இல்லை. நகர சந்தைக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளும் இல்லை. இந்நிலையில் அருகில் உள்ள சந்தைகளிலேயே மீன்களை கடற்றொழிலாளர்கள் விற்பனைசெய்து விடுகின்றார்கள். பிரதேச சபை தமக்கு வருமானம் அதிகரிக்க வேண்டுமானால் மேற்குறிப்பிட்ட சந்தைகளுக்கு பிரதேச சபையின் வரி வசூலிப்பாளர்களை நியமித்து வரிகளைப் பெற்றுக் கொள்ளலாம். கடலில் கஸ்டப்பட்டு தொழில்செய்து கரை திரும்பும் கடற்றொழிலாளர்கள் முல்லைத்தீவு நகரச் சந்தையில் தான் எல்லா மீன்களையும் விற்க வேண்டும் என்ற கருத்தைஏற்றுக்கொள்ள முடியாது. பிரதேச சபைக்கு வருமானம் வேண்டுமானால் கடற்கரைக்கு வந்து வரிகளை அறவிடுங்கள். அதற்கான ஏற்பாடுகளைத் தான் பிரதேச சபை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ப-13)



## சுகாதாரப் பொருள்களை வழங்கியது சாந்திகம் உளவளத்துணை நிலையம்

கொடிகாமம், ஜூலை 5

கொவிட் தொற்றுக்கு உள்ளாகி தனிமைப்படுத்தப்பட்ட யாழ் மாவட்டத்தின் சகல பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் உட்பட்ட பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களுக்கு யாழ்ப்பாணம் சாந்திகம் உளவளத் துணை நிலையத்தால் சுகாதாரப் பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

தனிமைப்படுத்தப்படும் குடும்பங்களுக்கு அவர்களது குடும்ப அங்கத்தவர்களிடையே தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த இந்த சுகாதாரப் பொருள்கள் அடங்கிய பொதிகள் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி, கோப்பாய், உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், கரவெட்டி மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுகளுக்கு இவ்வாறு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. முதல் கட்டமாக ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதமும் இரண்டாம் கட்டமாக 300 குடும்பங்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும் யாழ்.மாவட்டத்தில் 29 லட்சம் ரூபா பெறுமதியான சுகாதாரப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் ஆயிரம் குடும்பங்களுக்கு 20 லட்சம் ரூபா பெறுமதியான சுகாதாரப் பொருள்களும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்று தெரிவித்தார். (ப-159)

## கைவிடப்பட்டவர்கள், ஏழைகளுக்கு உதவுவதே மெய்யான உதவியாகும்

### சட்டத்தரணி சுகாஸ் தெரிவிப்பு



இன்றை கோவிட் சூழ்நிலையில், கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஏழை மக்களுக்கு செய்கின்ற உதவியே மெய்யான உதவியாகும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரமுகரும், சட்டத்தரணியுமான சுகாஸ் தெரிவித்துள்ளார்.

நவாலி வடக்கு, கட்டுடை, மானிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய் மற்றும் மானிப்பாய் ஆகிய பிரதேசங்களில் கொவிட் - 19 ஆல் பாதிக்கப்பட்ட பெண் தலைமைக் குடும்பங்கள், கைவிடப்பட்டவர்கள்,மாற்றுத் திறனாளிகள், பொதுசன மாதாந்த உதவி பெறுவோர் என 350 பேருக்கு உதவிகளை வழங்கி கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொவிட்-19 எனும் கொடிய வைரஸ் இன்னும் என்ன செய்யப்போகின்றது என்பது எவருக்கும் புரியாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது. பயணத்தடையால் வலி.தென் மேற்கில் உள்ள பின்னடைந்த கிராம மக்கள் பஞ்சம், பசி, பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் வாயிலாக எமது பிரதேச பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக சிறு உதவிகளைச் செய்ய வேண்டும் என எண்ணினேன் அதன் வாயிலாக உடன் செயற்படும் வண்ணம் 350 பொதிகளை வழங்கிவிட்டேன். எனினும் எனது பயணம் ஓயவில்லை. பட்டியல்கள் எமக்கு கிடைத்த வண்ணம் உள்ளன. இன்னும் சில நாள்களில் வடமராட்சி மற்றும் தென்மராட்சி போன்ற இடங்களில் உள்ள பொருண்மியம் நலிவடைந்த மக்களுக்கு உதவ உள்ளேன். நான் கேட்டுக்கொள்வது யாதெனில் இன்று யாழ். மாவட்டத்தில் எமக்கு தெரியாத கிராமங்களில் எத்தனையோ குடும்பங்கள் மறுவேளைக்கு உணவின்றி அல்லல்படுகின்றன. எமது மாவட்டத்தில் சேவைசெய்ய வேண்டும் என்ற எண்ணமும் ஆற்றலும் உள்ள அன்புள்ளங்கள், தொழில் அதிபர்கள், பரோபகாரிகள் மற்றும் வசதிபடைத்த உறவுகள் இன்றைய கால மாறுபட்ட சூழலில் வாழும் மக்களுக்கு உதவுங்கள். அதுவே மெய்யான இறைசேவையாகும் - என்றார். (ப-50)

## விவசாயியை மோதித்தள்ளி தப்பித்தது 'டக்சி'

### களிக்காட்டில் சம்பவம்

முல்லைத்தீவு - முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெடுங்கேணி வீதியில் களிக்காடு பகுதியில் வீதியால் சென்ற 'டக்சி' ஒன்று விவசாயியை மோதித் தள்ளிவிட்டு தப்பிசென்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த விவசாயி, விவசாய நடவடிக்கைக்காக களிக்காடு சென்ற போது இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. வேகமாக வந்த டக்சி வாகனம் விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது. 55 வயதுடைய கண்ணன் என்று அழைக்கப்படும் விவசாயியே இதன்போது காயமடைந்துள்ளார். அவர் நோளாயர் காவு வண்டி மூலம் முல்லைத்தீவு, மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார். விபத்து தொடர்பில் மாவட்ட மருத்துவமனைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்கள். (ப-19)

## பளை பொலிஸ் பொறுப்பதிகாரியால் உதவிப்பொருள்கள்

கிளிநொச்சி, ஜூலை 5

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பளை பொலிஸ் நிலையத்தால் 38 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட பளை பிரதேசத்தில் வாழும் பொருண்மியம் நலிவடைந்த 38 குடும்பங்களுக்கே பளை பொலிஸ் பொறுப்பதிகாரியால் உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. இதில் பளை நகரப்பகுதியில் உள்ள வியாபார உரிமையாளர்கள் சிலரும் கலந்து கொண்டனர். (ப-113)

## முல்லையில் கொவிட் தொற்றுக்கு வெளிமாவட்டத்தவர்களே காரணம்

### ரவிகரன் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெளிமாவட்டத்தவர்களின் வருகை அதிகரித்துள்ளதாலேயே கொவிட் - 19 தொற்றும் அதிகரித்துள்ளது என்று வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாயாற்றில் வெளிமாவட்டத்தவருடைய வருகை அதிகரித்துள்ளது. வெளிமாவட்டத்திலிருந்து வருகை தந்தவர்களில் ஐவர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இது முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரை அபாயகரமானதாகும். ஏற்கனவே புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் இதேபோன்று வெளிமாவட்டத்தவர்களால் தொற்று ஏற்பட்டு சுகாதாரத் தரப்பின் அயராத முயற்சியால் அது கட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது. இந்நிலையில் இவ்வாறு மீண்டும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களால் முல்லைத்தீவில் தொற்று அபாயம் ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் 29ஆம் திகதி முதல்தடவையாக செம்மலை கிழக்கு நாயாறுப் பகுதியில் உள்ள வெளிமாவட்ட மீனவர்கள் 25 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. குறித்த பரிசோதனையின் முடிவிலேயே ஐவருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதாகவும் சுகாதாரத் தரப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனைத் தொடர்ந்து அப்பகுதி முடக்கப்பட்டுள்ளது. அத்தோடு இம்மாதம் 02ஆம் திகதி 74 பேருக்கு பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதேவேளை குறித்த செம்மலை கிழக்கு நாயாற்றுப் பகுதியில் ஆயிரக்கணக்கில் குடும்பங்களுடன் தங்கியுள்ள மீனவர்கள் பெரும்பாலும் பதிவுகள் இன்றி உள்ளனர் என்று கூறப்படுகின்றது. அங்கிருக்கும் வெளிமாவட்டத்தவர்கள் பரிசோதனைச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்க மறுக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு பதிவின்றித் தங்கியிருப்பவர் தொடர்பில் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் நடவடிக்கை எதனையும் எடுக்காதது ஏன்? இத்தகைய அசமந்தமான செயற்பாட்டை வன்மையாக் கண்டிக்கின்றேன் - என்றார். (ப-246)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொவிட் சவாலான காலத்திலும் இலாபகரமாகச் செயற்பட்டோம்

## தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்க பொது முகாமையாளர் தெரிவிப்பு



கொடிகாமம், ஜூலை 5
சித்திரை மற்றும் வைகாசி ஆகிய மாதங்கள் பெரிய சவாலாக இருந்தபோதிலும்கூட இலாபகரமாக நடத்திச் செல்ல எமது கிளை முகாமையாளர்கள் பக்கபலமாக பலதரப்பட்ட இன்னல்களை எதிர்நோக்கி பணியாற்றினர் என்று தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார்.

99 ஆவது கூட்டுறவு தின விழாவில் கலந்து கொண்டு மேலும் அவர் தெரிவிக்கையில்;

"ஒன்றுசேர்ந்து சிறப்பாக மீளக் கட்டியெழுப்புவோம்" என்பது தான் 99 ஆவது சர்வதேச கூட்டுறவு தின வாக்கியமாகும். எனவே ஒன்றுசேர்ந்து மீளக் கட்டியெழுப்புவோம். எமது சங்கத்தைப் பொறுத்தவரை கொவிட் 19 காலத்தில் அனைத்து கிராமப்புறப் பகுதிகளில் உள்ள கூட்டுறவுக் கிளை நிலையங்களைத் திறந்து மக்களுக்காக அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளனர். அதேவேளை எமது கூட்டுறவுச் சங்கத்தின் பகுதி முடக்கப்பட்டு பயணத்தடை ஏற்பட்ட காலப் பகுதிகளில் கொடிகாமம் நகர்ப் பகுதியில் உள்ள கொடிகாமம் கிளைகள் திறக்க முடியாத நிலையில் நடமாடும் சேவை மூலம் அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளனர். அதற்கு உறுதுணையாக இருந்த பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனைய பணியாளர்களும் இந்தப் பயணத்தடைக் காலத்தில் சங்கத்தின் நாளாந்தச் செயற்பாடுகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்று கடமையாற்றியுள்ளனர். சித்திரை, வைகாசி ஆகிய மாதங்கள் பெரிய சவாலாக இருந்தபோதிலும் கூட இலாபகரமாக நடத்திச்செல்ல எமது கிளை முகாமை யாளர்கள் பக்கபலமாக பலதரப்பட்ட இன்னல்களை எதிர்நோக்கி பணியாற்றினர். பயணத்தடையின்போது பொலிஸாரின் அனுமதியுடன் எமது சேவைகளைச் செய்துள்ளோம் எமது சங்கம் மாவட்ட மட்டத்தில் நல்ல முன்னுதாரணமாக இயங்கி வருகிறது என்பது கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் முற்றுமுழுதாக அறிந்த விடயம் ஆகும். நாம் முன்னுதாரணமாகத் தொடர்ந்து முதற் சங்கமாக இயங்க அனைத்துப் பணியாளர்களும் தங்களது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என்றார். (ப-159)

# வீட்டுத்திட்டங்களின் போதுபயனாளிகளே தமது வீடுகளுக்கு அடிக்கல் நடவேண்டும்

## இந்து சமயத் தொண்டர் சபை கோரிக்கை

**கொடிகாமம், ஜூலை 5**
**மக்கள் மனங்களை சிரமப்படுத்தாது சமய சாத்திர சம்பிரதாய முறைப்படி பயனாளிகளே தமது வீடுகளுக்கான அடிக்கல்லை நடுவதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் எடுக்க வேண்டும் என்று இந்து சமயத் தொண்டர் சபையின் கிளிநொச்சி முல்லைத்தீவு ஆணையாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
இன்றைய அரசின் நிர்மாணத் துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு அமைச்சின் கீழ் வழங்கப்படும் வீட்டுத் திட்டமானது பொருண்மியம் நலிவடைந்த மக்கள் நிம்மதியாக வாழ்வதற்காகவா? அல்லது சாவதற்காகவா? வட மாகாணத்தில் கிராம மட்ட உத்தியோகத்தர்களாலும், பிரதேச செயலகங்களாலும், தெரிவுசெய்யப்பட்ட வீட்டுத்திட்டத்துக்கு தாங்கள் தான் நாள் அத்திபாரத்துக்கான அடிக்கல்லை நடவேண்டும் என சிலர் நடுகின்றனர். மக்களின் வீட்டுத் திட்டங்களுக்கான அடிக்கல்லை நடுவோர் தங்களுடைய வீட்டுக்கு, அல்லது அவர்களுடைய உறவினர்களுடைய வீடுகளுக்கு எந்த நாள் நட்சத்திரமும் பார்க்காது நாள் அத்திபாரத்துக்கான அடிக்கல்லை நடுவதற்கு சம்மதிப்பார்களா?.

பொருண்மியம் நலிவடைந்த மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு வீட்டுத்திட்டம் வழங்குகின்றார்களா? அல்லது அவர்களை சாகடிப்பதற்காக கல்லறை கட்டுகின்றார்களா?. இனிவரும் காலங்களில் மக்கள் மனங்களைச் சிரமப்படுத்தாது சமய சாத்திர சம்பிரதாய முறைப்படி பயனாளிகளே தமது வீடுகளுக்கான அடிக்கல்லை நடுவதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் எடுக்க வேண்டும் - என்றார். (ப-159)

# கொடிகாமத்திலும் 'சமிக்ஞை விளக்கு'



சாவகச்சேரி, ஜூலை 5
கொடிகாமம் நகரப் பகுதியில் அமைக்கப்பட்ட தன்னியக்க சமிக்ஞை விளக்குகள் செயற்படத் தொடங்கியுள்ளன.
கொடிகாமம் நகர நாற்சந்தி ஊடாக தின மும் பெருமளவு வாகனங்கள் பயணிப்பதால் விபத்துக்கள் ஏற்படுவதைக் தடுப்பதற்காக தினமும் பொலிஸார் இரவு பகலாகக் கடமையில் இருந்தனர். புலோலி - கொடிகாமம் வீதி தார்க்கலவை வீதியாக மாற்றப்பட்டதால் பொதுமக்க ளின் நலன் கருதி சாவகச்சேரி பிரதேச சபையால் இரு மாதங்களுக்கு முன்னர் தன்னியக்க சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டன. நேற்று சமிக்ஞை விளக்குகள் செயற்படத் தொடங்கியதால் வாகனங்கள் வேகக் கட்டுப்பாட்டுடன் பயணித்து வருகின்றன. (ப-9)

### சாவகச்சேரியில்

# 18 பேருக்கு அன்டிஜென் பி.சி.ஆர், பரிசோதனை

சாவகச்சேரி, ஜூலை 5
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் நேற்றுமுன்தினம் ஒன்பது பேருக்கு எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனையும், கைதடி ஆயுள் வேத மருத்துவமனை மருத்துவர்கள் ஒன்பது பேருக்கு அன்டிஜென் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டன.

அன்டிஜென் பரிசோதனை செய்யப்பட்ட ஒன்பது பேருக்கும் தொற்று ஏற்படவில்லை எனவும், பி.சி.ஆர்.பரிசோதனையில் பெறப்பட்ட மாதிரிகள், யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ப-9)

# 2 ஆம் கட்டத் தடுப்பூசி ஏற்றாதோருக்கு மேலும் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது

## சாவ.சுகாதாரப் பிரிவினர் அறிவிப்பு

சாவகச்சேரி, ஜூலை 5
கொரோனா இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றுவதற்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தை தவறவிட்டவர்களுக்கு மேலும் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. அடுத்தடுத்த கட்டங்களிலும் இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படமாட்டாது என சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் முதலாம் கட்டத் தடுப்பூசி கடந்த மே மாத இறுதிப் பகுதியில் ஏற்றப்பட்டது.

முதலாம் கட்டத் தடுப்பூசி ஏற்றப்பட்டபோது, தென்மராட்சியில் 6 ஆயிரத்து 55 பேர் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டனர். இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றப்பட்டபோது தென்மராட்சி பிரதேசத்தில் கைதடி ,கொடிகாமம் மருத்துவமனைகள் மற்றும் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் ஆகியவற்றில் மூன்று தினங்களில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டனர். ஜூலை முதலாம் இரண்டாம் திகதிகளில் தடுப்பூசி ஏற்ற வந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகக் காணப்பட்டதால் இரண்டாம் கட்டத் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதற்கு ஐந்நூறுக்கு மேற்பட்டோருக்கு மேலும் ஒருநாள் கால அவகாசம் வழங்கப்பட்டது. நேற்றுமுன்தினம் நண்பகல் வரை மிகக் குறைந்த எண்ணிக்கையினர் தடுப்பூசியை ஏற்றிக் கொண்டுள்ளனர். இன்னும் 480 பேர் இரண்டாம் கட்டத் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளவில்லை.

கொரோனாவைத் தடுக்க ஒரு மாத இடைவெளிக்குள் இரண்டு கட்டத் தடுப்பூசிகளும் ஏற்ற வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

முதலாம் கட்டத் தடுப்பூசியை ஏற்றி இரண்டாம் கட்டத் தடுப்பூசியை ஏற்றாத குறித்த நபர்களுக்கு அடுத்தடுத்த கட்டங்களில் தடுப்பூசி கிடைத்தாலும் ஏற்றப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

# வீட்டுத்திட்டத்துக்கான மிகுதி பணத்தை உடன் வழங்குங்கள்

## ஜீவநகர் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 5
நிரந்தர வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு மிகுதி நிதியை வழங்குங்கள் என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முத்துஜயன்கட்டு - ஜீவநகர் மாதிரிக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முத்துஜயன்கட்டு கிராமத்தின் ஜீவநகர் மாதிரிக் கிராமம் கடந்த 2019 ஆம் ஆண்டு நல்லாட்சி காலகட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டதும், மக்கள் தற்காலிக வீடுகளை அமைத்து, நிரந்தர வீட்டை அமைப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்தனர். ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து மக்களுக்கான கொடுப்பனவு நிறுத்தப்பட்டது. இதனால் கட்டுமானப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டன. தற்போது மக்கள் தற்காலிக கொட்டகைகளில் வசித்து வந்ததோடு, மலசலகூட வசதிகள், மின்சார வசதிகள் மற்றும் குடிதண்ணீர் வசதிகள் ஆகிய எதுவுமற்ற நிலையில் வாழ்கின்றனர். அண்மையில் குறித்த கிராமத்துக்குச் சென்ற மாவட்டச் செயலர் தலைமையிலான அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்களது முயற்சியால் கிராமத்தில் அனைத்துக் குடும்பங்க ளுக்கும் மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. பொதுக்கிணறுகள் நான்கு அமைக்கப்பட்டன. தற்போது மின்சார இணைப்புகள் வழங்கப்படுகின்றன. எனினும் நிரந்தர வீடுகளைக் கட்டி முடிபதற்கான நிதி வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தற்போது வாழும் தற்காலிகக் கொட்டில்களில் மழைகாலங்களில் வாழ முடியாது என்பதால் வீட்டைக் கட்டுவதற்கும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொண்டனர். (ப-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கொழும்புத் துறைமுக நகரம்

## அடுத்த மாதம் மக்கள் பாவனைக்கு

**கொழும்பு, ஜூலை 5**

**கொழும்பு துறைமுக நகர வளாகம் நாட்டு மக்களுக்காக அடுத்தமாதம் திறக்கப்படும் என்று துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழு உறுப்பினர் கலாநிதி பிரியத் பந்து விக்ரம தெரிவித்துள்ளார்.**

இதற்கமைவாக, கொழும்பு துறைமுக நகர வளாக பூங்கா மற்றும் கரையோரப் பகுதி மக்களுக்காக திறக்கப்படவுள்ளது.

இதேவேளை, துறைமுக நகர் திட்டத்தில் முதலீடு செய்வதற்கு பல முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழு உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

குறித்த துறைமுகநகர் பகுதியை சீனா அமைத்துள்ளது. கடும் எதிர்ப்பலைகளுக்கு மத்தியில் துறைமுக நகர் நிர்மாணப் பணி இறுதிக்கட்டத்தை அடைந்திருந்தது.

இந்தநிலையில், குறித்த துறைமுக நகர், திறந்துவிடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

# மாயனூர் காட்டுப்பகுதியில் கசிப்பு கோட்டை முற்றுகை

கிளிநொச்சி, ஜூலை 5

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாயனூர் காட்டுப்பகுதியில் இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் கிளிநொச்சி பொலிஸ் மது ஒழிப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து சுற்றி வளைக்கப்பட்டு முற்றுகையிடப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சுற்றிவளைப்பில் 214 லீற்றர் கசிப்பு, 2015 லீற்றர் கோடா, மற்றும் கசிப்பு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பவை கைப்பற்றப்பட்டன. சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என கிளிநொச்சி மது ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். (ப-113)



# சில வாரங்களில்

## அரிசி விலை குறையும்

கொழும்பு, ஜூலை 5



எதிர்வரும் சில வாரங்களில் அரிசியின் விலை குறைவடையும் என்று நெல் கொள்வனவு சபையின் உப தலைவர் துமிந்த பிரியதர்ஷன தெரிவித்துள்ளார்.

சிறுபோக நெற்செய்கையில் அறுவடை செய்யப்படும் நெல்லை அரிசியாக்கி சந்தைக்கு விநியோகிக்கும் வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சந்தையில் அரிசியின் விலை விரைவில் குறைவடையும் என்று அவர் கூறினார்.

இதேவேளை, அரிசி விலையை முறையாக முன்னெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)



# நாவலனின் பிறந்தநாளில் மக்களுக்கு நிவாரண உதவி

வேலணை, ஜூலை 5

வேலணை பிரதேச சபை உறுப்பினரும் , தமிழ் அரசுக் கட்சியின் ஊர்காவற்றுறைத் தொகுதி கிளைச் செயலாளருமான கருணாகரன் நாவலன் தனது பிறந்த தினத்தை முன்னிட்டு 30 ஆயிரம் ரூபா நிதியில் பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களுக்கு உலருணவுப்பொருள்களை வழங்கியுள்ளார் .

2000ஆம் ஆண்டு தென்மராட்சி மிருசுவில் கிராமத்தில் இராணுவத்தால் படுகொலைசெய்யப்பட்ட 8 பொதுமக்களின் குடும்ப உறவுகளுக்கும் தீவகத்தில் பல குடும்பங்களுக்கும் இவ்வாறு உலருணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. உணவுப்பொருள்கள் கையளிக்கும் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர் கருணாகரன் குணாளன் மற்றும் சமூக ஆர்வலர்களான தரங்கன் , ஜீவா மற்றும் ராகுலன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ப)

# கொரோனாவால் உயிரிழந்தோரின் குடும்பங்களும் உணவுப்பொதிகள்

கொடிகாமம், ஜூலை 5

99 ஆவது கூட்டுறவு தினத்தை முன்னிட்டு தென்மராட்சி,பிரதேசத்தில் கொவிட் தொற்றால் உயிரிழந்த 3 பேரின் குடும்பங்களுக்கு தென்மராட்சி கிழக்கு பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் நிவாரணப்பொதிகள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ பணிமனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில், தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ.அ.ஆனந்தராசா, பொது முகாமையாளர் சி.தேவகுமார் மற்றும் வர்த்தக முகாமையாளர் த.இரவீந்திரன் ஆகியோர் தலா மூவாயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப்பொதிகளை வழங்கினர். (ப-159)



# வாவி தூர்வார்ந்தமையால் மரபுரிமைக்கு பாதிப்பா?

## விசேட குழு விசாரணை

கொழும்பு, ஜூலை 5

திஸ்ஸமஹாராம வாவியில் இடம்பெற்ற தூர்வாரும் நடவடிக்கையால், தொல்பொருள் மரபுரிமைக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் தொல்பொருள் திணைக்களத்தின் விசேட குழுவொன்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

திணைக்களத்தின் தென் மாகாண அலுவலகத்தின் குழுவொன்று கடந்த வெள்ளிக்கிழமை வாவியில் ஆய்வொன்றை மேற்கொண்டது என்று தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க தெரிவித்தார்.

வாவியை தூர்வாரும் நடவடிக்கையின்போது, தொல்பொருள் மரபுரிமைக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் விரிவான அறிக்கையொன்றை தயாரித்து, வாவியை தூர்வார்வதற்கு அனுமதி வழங்குவதா, இல்லையா என்பது தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

இந்த விசாரணை அறிக்கை இன்று திங்கட்கிழமை எமக்கு கிடைக்கவுள்ளது.

சீன - இலங்கை கூட்டுத் திட்டத்தினூடாக திஸ்ஸமஹாராம வாவியின் சேற்று மணலை அகற்றும் நடவடிக்கை சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதி பெறப்படாததால் அந்த நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது என்று தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இதேவேளை, கி.பி 33 - 43 காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த வாவி நாட்டின் நீர்ப்பாசன பாரம்பரியத்தில் முக்கிய இடத்தை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

# எரிபொருள் பவுசரில்

## கஞ்சா கடத்திய கில்லாடிகள்

கொழும்பு,ஜூலை 5

எரிபொருள் பவுசர் மூலம் கஞ்சா போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 2 கிலோ கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர்கள் நீண்டகாலமாக கஞ்சா கடத்தல் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஐ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சேதனப் பயிர்ச்செய்கை நடைமுறைச் சாத்தியமற்றது

## இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனச் செயலாளர் சுட்டிக்காட்டு



**கிளிநொச்சி, ஜூலை 5**

**உடனடியாகவே சேதனப் பயிர்ச்செய்கைக்கு மாறுவது என்பது நடைமுறைக்குச் சாத்தியமற்றது. இதனால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என கிளிநொச்சி இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனச் செயலாளர் முத்து சிவமோகன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி ஊடக அமையத்தில் இடம்பெற்ற சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இயற்கை உர விவசாயம் என்பது விவசாயிகளுக்கு வெறுப்பானதோ அல்லது விரும்பத்தகாத ஒன்றோ அல்ல.

60 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் இயற்கை உரத்தைப் பயன்படுத்தியே விவசாய நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வந்தனர்.

அதில் விவசாயிகள் அடைந்த நன்மைகள் அதிகம் அதனால் விவசாயிகள் பாதிக்கப்படவில்லை. அப்போதிருந்த சனத்தொகைக்கு இயற்கை உரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட உற்பத்திகள் போதுமான்தாக இருந்தது.


ஆனால் 1960 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் விவசாயப் புரட்சி என்கின்ற பெயரில் இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி ஆகியவற்றை விவசாயிகள் மத்தியில் திணித்து, ஆசைக்காட்டி இயற்கையோடு இருந்த விவசாயிகளை அதிலிருந்து விடுவித்தது விவசாயத் திணைக்களங்களே.

எனவே விவசாயிகள் இதற்கு எதிரானவர்கள் என்பது தவறானது. ஆனால் இன்று இருக்கின்ற சனத்தொகைக்கு ஏற்ப இயற்கை உரத்தைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கையில் உற்பத்திகளை மேற்கொள்ள முடியாது.

நூறு வீதம் இயற்கை உரத்தைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளுக்குச் சென்றால் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு உற்பத்திகளை மேற்கொள்ள முடியாது. நாட்டின் கேள்வியை பூர்த்தி

செய்ய முடியாத அளவுக்கு உற்பத்தி காணப்படும். எனவே தேவையைப் பூர்த்திசெய்வதற்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறு இறக்குமதி செய்கின்றபோது அப்பொருள்களில் இரசயனங்கள் பயன்படுத்தப்பட்டிருக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது.

எனவே இயற்கை உரத்துக்குச் செல்கின்றபோது அதனைப் படிப்படியாக மேற்கொள்ள வேண்டும் என்பதே விவசாயிகளின் நிலைப்பாடாகும்- என்றார். (ப-214)



# அக்கராயன் தாழ்பாலத்தை மேம்பாலமாக மாற்றுங்கள்

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 5

கிளிநொச்சி அக்கராயன் தாழ் பாலத்தை மேம்பாலமாக மாற்றுவதற்கு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கராயன் பொது அமைப்புகள் வலியுறுத்தியுஉள்ளன.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்;

திருமுறிகண்டி - அக்கராயன் வீதியில் அக்கராயன் குளத்தின் வான் வெள்ளம் வீதியைக் கடக்கின்ற பகுதியில் தாழ்பாலம் அமைந்துள்ளது. குளம் வான் பாய்கின்றபோது வீதியை மூடி மூன்றடிக்கு மேலாக வெள்ளம் பாய்கின்றது. இதனால் ஐந்து நாள்களுக்கு மேல் போக்குவரத்து துண்டிக்கப்படும். அக்கராயன் பிரதேச மருத்துவமனையின் நோயாளர் காவு வண்டி கிளிநொச்சி பொது மருத்துவமனைக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்படும். இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் குறித்த பாலத்தை மேம்பாலமாக மாற்றுமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோது மேம்பாலமாக மாற்றுவோம் எனக் கடந்த பத்தாண்டுகளாக வாக்குறுதிகள் மட்டும் வழங்கப்படுகின்றன.

எனினும் தாழ்பாலம் மேம்பாலமாக மாற்றப்படவில்லை. கிளிநொச்சி மாவட்டத்தின் மழை காலத்தில் இடர் மிகுந்த பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள தாழ்பாலத்தை மேம்பாலமாக மாற்றுவதற்கு தற்போதுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ப-13)

# சைக்கிள் திருட்டுக்கள்

## சத்தியக்காட்டில் அதிகரிப்பு

சுழிபுரம், ஜூலை 5

சுழிபுரம் சத்தியக் காடு சந்தையில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கொவிட் 19 பயணக் கட்டுப்பாட்டின் பின்னர், சந்தைகள் திறக்கப்பட்டு, வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், சத்தியக்காடு சந்தையிலும் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன இந்த நிலையில் அங்கு வரும் மக்களுடைய சைக்கிள்கள் திருடர்களால் திருடிச் செல்லப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சந்தைக்குச் சென்று சந்தையின் உள் பகுதியில் சைக்கிளை நிறுத்தி விட்டு மரக்கறிகளைக் கொள்வனவு செய்த பெண் ஒருவருடைய சைக்கிளும் திருடப்பட்டுள்ளது. பொருள் கொள்வனவை முடித்து விட்டு சைக்கிளைப் பார்த்தபோது அது திருட்டுப் போனது தெரியவந்தது. வீட்டு வேலைக்குச் சென்று அதில் வரும் வருமானத்தில் தனது குடும்பத்தை கொண்டுநடத்தும் குறித்த பெண் தன்னுடைய சைக்கிள் திருடப்பட்டதை நினைத்து சந்தையில் அழுது புலம்பியுள்ளார்.

இதனை அடுத்து, அருகில் நின்ற பெண் ஒருவர் அவரை வீடு வரை கொண்டு சென்று இறக்கிவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் நடவடிக்கை எடுத்து திருட்டைத் தடுப்பதுடன், திருடப்பட்ட சைக்கிள்களையும் மீட்டு உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப)




திருநெல்வேலி பகுதிகளில் அக்னி இளையோர் அணியினரால் சுவரோவியங்கள் வரையப்பட்டு வருகின்றன. சமூகத்தில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் விதமாக இந்தச் சுவரோவியங்கள் வரையப்படுகின்றன. (ப-20)



### துணுக்காய் பிரதேசத்தில் வறட்சி;

# பிரதேச செயலகமே குடிதண்ணீர் நெருக்கடியைத் தீர்க்க வேண்டும்

## பிரதேச சபைத் தவிசாளர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 5

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் குடிதண்ணீர் நெருக்கடி ஆரம்பித்துள்ள நிலையில், குடிதண்ணீர் விநியோகத்தை பிரதேச செயலகம் மேற்கொள்ளவேண்டும் என்று துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளர் அ.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கு பிரதேச சபையிடம் வாகன வசதி இல்லை. அமைதிபுரம் மற்றும் புத்துவெட்டு வான் போன்ற நீண்ட தூர கிராமங்க ளுக்குச் சென்று குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இறுதியாக நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பிரதேச சபையின் வாகன நெருக்கடி தொடர்பாகத் தெரியப்படுத்தியுள்ளேன். துணுக்காய் பிரதேசத்து மக்களுக்கு குடிதண்ணீரை விநியோகிக்க வேண்டும் என்ற கோரிக்கையை துணுக்காய் பிரதேச செயலகத்திடம் தான் விடுக்கவுள்ளேன். துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் தற்போது 8 கிராமங்களில் குடிதண்ணீர் நெருக்கடி ஆரம்பித்துள்ளது. கடந்த காலங்களில் துணுக்காய் பிரதேச செயலகம் மற்றும் துணுக்காய் பிரதேச சபை இணைந்து குடிதண்ணீர் வழங்கலை வறட்சி காலங்களில் மேற்கொண்டன -என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பொருளாதாரம் படுமோசம் இனியும் மக்களை ஏமாற்றாதீர்கள்!

## வேண்டுகோள் முன்வைக்கிறார் முன்னாள் சபாநாயகர் கரு

**கொழும்பு,ஜூலை 5**

**நாட்டின் பொருளாதாரம் படுமோசமடைந்துள்ளது. உண்மை நிலைவரம் இவ்வாறிருக்கையில், அரசியல்வாதிகள் தாம் வேறு உலகத்தில் இருப்பது போன்று பொய்யான கதைகளை சோடித்து, பொதுமக்களை ஏமாற்றுவதற்கு முயற்சிக்கின்றனர்.**

இவ்வாறு சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும், முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்துத் தரப்பினரிடம் இருந்தும் கிடைக்கப்பெறும் அறிக்கைகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில், நாடு மிகவும் வேகமாக அழிவை நோக்கிப் பயணித்துக்கொண்டிருப்பது தெளிவாகப் புலப்படுகின்றது. வெளிநாட்டுக் கையிருப்பில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, வெளிநாட்டுக்கடனை மீளச்செலுத்துவதற்காக சில மாதங்களுக்குள் பெருமளவான நிதியைத் திரட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளமை மற்றும் இறக்குமதி நடவடிக்கைகளின்போது கடன்பத்திரமொன்றை விநியோகிக்க வேண்டிய தேவையுள்ளமை ஆகியவை விசேடமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும். அதுமாத்திரமன்றி நாட்டில் காணப்படும் தற்போதைய சூழ்நிலையில் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் தரப்பினர் தொடர்பிலும் சிந்திக்க வேண்டியுள்ளது. குறிப்பாக வெளிநாடுகளில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதுமாத்திரமன்றி எமது நாட்டில் வாழும் மாணவர்களுக்கும் கல்வியைப் பெறுவதற்கான உரிமை கேள்விக்குறியாகியுள்ளது.

பாடசாலைகள் முழுமையாக மூடப்பட்டு, பாடசாலைக்கல்வி சீர்குலைந்துள்ளது. பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டுள்ளன. மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான மாற்றுத்தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு உரிய தரப்பினர் தவறியுள்ளனர்.

இவற்றிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகள் மற்றும் தமது எதிர்காலச் செயற்றிட்டம் தொடர்பில் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். இன்றளவில் எமது நாடு பொருளாதார ரீதியில் மாத்திரமன்றி, அரசியல் ரீதியிலும் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. அரசியல்வாதிகள் செயற்படும் விதத்தைப் பார்க்கும்போது அது நன்கு புலனாகின்றது.

தெளிவான ஆதாரங்களின் அடிப்படையில் நீதிமன்றால் தீர்ப்பளிக்கப்பட்ட பல வழக்குகளில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்களை விடுதலைசெய்யுமாறு பரிந்துரைகளில் கூறப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி எதிர்த்தரப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகள் பலர் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

சட்ட திட்டங்களை உரியவாறு பின்பற்றுகின்ற ஒழுக்கமான எந்தவொரு நாட்டிலும் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறாது. சட்டத்துக்கும், அரசமைப்புக்கும் முரணான இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக பலர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளனர்.

இருப்பினும் இந்த விடயத்தில் நாட்டின் நாடாளுமன்றம் அதன் கடமையைச் சரியாக நிறைவேற்றுவதாகத் தெரியவில்லை.

மேலும் அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தின் பின்னர் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு நியமிக்கப்படும் உறுப்பினர்கள் தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும்- என்றார். (ஓ.4)

## கொரோனாவால் பாதிக்கப்பட்டோருக்கு உளவள ஆலோசனை

கொடிகாமம், ஜூலை 5

கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், தமக்கு தேவையான உளநல ஆதரவை சாந்திகம் உளவளத்துணை நிறுவனத்தின் உளவளத் துணையாளர்களைத் தொடர்பு கொள்வதன் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என்று சாந்திகம் உளவளத்துணை நிலையம் அறிவித்துள்ளது.

கொவிட் - 19 நோய்த் தொற்றால் இடை நிலை சிகிச்சை நிலையங்கள் மற்றும் சுய தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள், தொற்றுக்குள்ளானோர், தொற்றுக்குள்ளாகி இருக்கலாமென்று சந்தேகப்படுவோர் மற்றும் இவர்களைச் சார்ந்தவர்கள் பயம், பதட்டம், விரக்தி, குற்றவுணர்வு போன்ற உணர்வுகளால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் குறித்த சாந்திகம் நிறுவனத்துடன் தொடர்புகொள்ளமுடியும்.

சாந்திகம் நிறுவன அலுவலக இலக்கம், 021 222 3338 மற்றும் 0777668080, 0777668585 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-159)

## ராஜபக்சக்களால் நாட்டுக்கு சாபம்

### சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 5

எந்தவொரு ராஜபக்சவாலும் நாட்டை மேம்படுத்த முடியாது என்பதை மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். ராஜபக்சக்கள் நாட்டுக்கு சாபமானவர்கள். அதனால் தான் அவர்களுக்கு எதிராக நாட்டின் சகல திசைகளிலிருந்தும் எதிர்ப்புக்காற்று உருவாகிக்கொண்டிருக்கின்றது. இவை ஒன்றிணைந்து மக்கள் மத்தியில் சூறாவளியாக மாற்றமடையும். இதற்குத் தலைமை வகிப்பதற்கு நாம் தயாராக வுள்ளோம்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கொவிட் ஒழிப்பு செயற்பாடுகள் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை முகாமைத்துவம்செய்ய முடியாது ராஜபக்சக்கள் பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளனர். இதன் காரணமாக அரசியல் எதிர்ப்பு புயலொன்று அவர்களுக்கு எதிராக மக்கள் மத்தியில் உருவாகிக் கொண்டிருக்கிறது. அன்று மஹிந்த காற்றைப் பற்றி கூறினார். இன்று ராஜபக்சக்கள் இனி வேண்டாம் என்று கூறி மக்களின் எதிர்க்காற்று ஆரம்பமாகியுள்ளது.

இலங்கையின் வறுமை நிலையை 6 வீதம் வரை குறைப்பதற்கு எம்மால் முடிந்தது. ஆனால் முறையற்ற கொவிட் கட்டுப்படுத்தல் செயற்பாடுகள் மற்றும் முறையற்ற பொருளாதார முகாமைத்துவத்தால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ச ஆட்சியின்போது போர் வெற்றியை பெரிதாக பிரசாரம் செய்து அவர் அனைத்து பிரச்சினைகளையும் நிவர்த்திசெய்து விடுவார் என்று கூறினார்கள். அவரின் தோல்வியை அடுத்து கோத்தாபய ராஜபக்சவே அவரின் பின்னாலிருந்து போரை நிறைவுசெய்தார் என்று கூறினார்கள். தற்போது அவரும் தோல்வியடைந்துள்ளார். தற்போது பஸில் ராஜபக்சவைக் கூறுகின்றனர். எதிர்வரும் 3 வருடங்களில் நாமல் ராஜபக்ச தான் தேர்தல் வெற்றிக்குக் காரணம் என்று கூறுவார்கள். ஆனால் கோத்தாபய ராஜபக்சவைத் தொடர்ந்தும் யார் நாட்டின் தலைவர் என்பதை மக்கள் தீர்மானிப்பர்- என்றார். (ஓ.4)



## விபத்தில் காயம்

வவுனியா, ஜூலை 5

வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் மோட்டார்சைக்கிளும் முச்சக்கர வண்டியும் மோதுண்டு விபத்து இடம்பெற்றது. வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (த-18)

## வங்கியின் தவறு
# ரூ.13 லட்சம் பணத்தை மீள ஒப்படைத்த பெண்

கொழும்பு,ஜூலை 5

தம்புள்ளையில் உள்ள அரச வங்கி ஒன்றிலிருந்து தவறுதலாக கிடைத்த, 13 லட்சம் ரூபா பணத்தை, மீளவும் வங்கியிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தம்புள்ளை நகரத்தில் அழகுக் கலை நிலையம் நடத்தும் நிலூஷிகா ஜயவர்தன என்பவரின் நேர்மையான செயலை பலர் பாராட்டியுள்ளனர்.

குறித்த பெண் 7 லட்சம் ரூபா பணத்தை வங்கியில் பெற்றுள்ளார். அவர் பணத்தை எண்ணி பார்க்காமலேயே அழகுக்கலை நிலையத்துக்குச் சென்றுள்ளார். அங்கு சென்று பணத்தை எண்ணிப் பார்க்கும்போது, 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பணத்தாள் கட்டுகள் அதிகமாக இருப்பதை அறிந்துகொண்டார். மொத்தமாக 20 லட்சம் ரூபா பணம் இருந்துள்ளது. வங்கியிலிருந்து 13 லட்சம் ரூபா பணம் அதிகமாகக் கிடைக்கப் பெற்றுள்ளது.

இது தொடர்பில் வங்கிக்குத் தெரியப்படுத்தியுள்ளார். வங்கி அதிகாரிகள் குறித்த அழகுக் கலை நிலையத்துக்குச் சென்று 13 லட்சம் ரூபா பணத்தை அவரிடம் மீளப் பெற்றுள்ளனர்.

யாரோ ஒருவருடைய தொழிலைப் பறித்து, அடுத்தவர்களின் பணத்தைப் பெறுவதில் மகிழ்ச்சி ஒன்றும் இருந்து விடப் போவதில்லை என்று அவர் வங்கி அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். அவரது நேர்மையை அதிகாரிகள் பாராட்டியுள்ளனர். (ஓ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிச்சலுகையை தக்கவைக்க அரசு பெரும் பிரயத்தனம்

## கப்ரால் வீராப்பு பேசினாலும் இதுவே உண்மை என்கிறது எதிர்க்கட்சி



**கொழும்பு, ஜூலை 5**

**இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் வீராப்பு பேசினாலும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை எப்படியாவது தக்கவைத்துக்கொள்வதற்கே அரசு முயற்சிக்கின்றது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.**

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்பில் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் வெளியிட்டுள்ள கருத்து தொடர்பில் பதிலளிக்கையிலேயே பொருளாதார நிபுணரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஹர்ச டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இராணுவத்தினரைக் காட்டிக் கொடுத்து, பயங்கரவாத சந்தேக நபர்களை விடுதலைசெய்தே கடந்த அரசு ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை பெற்றது எனவும், தாங்கள் அவ்வாறு செய்யமாட்டோம், கிடைத்தால் கிடைக்கட்டும், இல்லாவிட்டால் பரவாயில்லை எனவும் அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் மறுபுறத்தில் ஐரோப்பியக் குழு இலங்கை வந்து, வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தனவுடன் பேச்சு நடத்தியுள்ளது.

இதன்போது பயங்கரவாதத் தடைச் சட்டம் மறுசீரமைக்கப்படும் என்ற உத்தரவாதத்தை வெளிவிவகார அமைச்சர் வழங்கியுள்ளார். எவ்வாறான மாற்றம் என்பது தொடர்பில் 3 மாதங்களுக்குள் முடிவெடுக்கப்படும் எனவும், இதற்காக அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பொசன் போயா தினத்தன்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க சந்தேகநபர்கள் 16 பேர் விடுவிக்கப்பட்டனர். எனவே, அஜித் நிவாட் கப்ரால் அரசுக்காக கதைக்கின்றாரா அல்லது அரசுக்கு எதிராக கதைக்கின்றாரா என்று தெரியவில்லை. எது எப்படியிருந்தாலும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை எப்படியாவது தக்கவைத்துக்கொள்ளவே அரசு முயற்சிக்கின்றது - என்றார். (ஒ.44)

## மெண்டிஸ் நிறுவனத்துக்கு
# மதுபானத் தயாரிப்புக்கு நிபந்தனைகளுடன் அனுமதி

கொழும்பு, ஜூலை. 5

மெண்டிஸ் நிறுவனத்துக்கு, கடுமையான நிபந்தனைகளின் கீழ் மதுபானம் தயாரிப்பதற்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று மதுவரித் திணைக்களப் பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

பல பில்லியன் டொலர் வரி ஏய்ப்பு காரணமாக மதுபானம் தயாரிப்பதற்கான நிறுவனத்தின் உரிமம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இருப்பினும், ஒப்புக்கொண்ட நிபந்தனைகளின் கீழ் நிறுவனம் தொடரத் தவறினால், உரிமம் மீண்டும் ரத்துச்செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வரி செலுத்துவதைத் தவிர்த்ததைத் தொடர்ந்து, மதுசார உற்பத்திக்கு 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து மெண்டிஸ் நிறுவனத்துக்குத் தடை விதிக்கப்பட்டது.

1960 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட டபிள்யூ. எம். மெண்டிஸ் அன்ட் கோ. நாட்டின் பழமையான உள்ளூர் மதுபான பிராண்டுகளில் ஒன்றாகும். இந்த நிறுவனம் பிணை முறி மோசடி வழக்கில் சிக்கியுள்ள அர்ஜுன் அலோசியஸுக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.4)

# புதையல் தேடிய 158 பேர் கைது

கொழும்பு, ஜூலை 5

தொல்பொருள் மற்றும் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில், கடந்த 4 மாதங்களில் 158 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதேவேளை இதே குற்றச்சாட்டுக்களில் கடந்த வருடத்தில் மாத்திரம் 200 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# ஆஸ்திரேலியத் தூதுவர் சஜித்துடன் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 5

இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் டேவிட் ஹோலி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை அவரது அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தார். சந்திப்பில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன. கடுமையான பேரழிவாக மாறியுள்ள கொரோனாத் தொற்றுத் தொடர்பில் இரு தரப்பினரும் கவனம் செலுத்தினர்.

இலங்கையின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்துக்கு தேவையான ஆதரவை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ஆஸ்திரேலியத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார்.

அதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியால் செயற்படுத்தப்படுத்தப்பட்டுவரும் "எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சு" என்ற திட்டத்துக்குத் தேவையான ஆதரவை வழங்குவோம் என்று தூதுவர் உறுதியளித்தார். (ஒ.4)

# மீண்டும் எகிறும் தங்கத்தின் விலை



யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்ப்பாணத்தில் தங்கத்தின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது. கடந்த வெள்ளிக் கிழமை நிலவரப்படி, ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவுக்கு தங்கம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவலால் சர்வதேச பங்குச் சந்தையில் நிலையற்ற தன்மை காணப்படுகிறது. இதனால் முதலீட்டாளர்கள் பாதுகாப்பான முதலீடான தங்கத்தில் முதலீடு செய்கின்றனர். தங்கத்தின் தேவை அதிகரித்து வருவதால், உலக சந்தையில் தங்கத்தின் விலையில் நிலையற்ற தன்மை காணப்படுகிறது. ஒரு பவுண் 22 கரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாவாகவும், 24 கரட் தூய தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவாகவும் உயர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.4)

# இணையம் மூலம் சிறுமி விற்பனை

## 26 பேர் கைது

கொழும்பு, ஜூலை 5

15 வயதுடைய சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியமை மற்றும் இணையத்தளத்தின் ஊடாக விற்பனைசெய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில், இதுவரை 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டுள்ளவர்களில் 20 பேர் குறித்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளனர். ஏனைய 6 பேர் சிறுமியை பாலியல் நடவடிக்கைகளுக்காக இணையத்தளத்தில் விற்பனைசெய்து வாகனத்தில் அழைத்துச்சென்றுள்ளனர்.

இவர்களில் சிறுமியின் தாய் மற்றும் சிறுமியை இணையத்தளத்தில் விளம்பரப்படுத்தியவரும் அடங்குவர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சிறுமியின் கைப்பேசியை சோதனையிட்டபோது, மேலும் பலர் தொடர்பில் இருந்துள்ளனர் என்று தகவல்கள் கிடைத்துள்ளன. மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய இன்னும் 16 பேரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# சந்தேகத்துக்கிடமான மனித எச்சங்கள் மீட்பு

## பொலிஸார் தீவிர விசாரணை

கொழும்பு, ஜூலை 5

வயல்வெளியொன்றில் கைத்துப்பாக்கியுடன் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி மாலை வயலில் தீயை அணைக்கச் சென்ற ஒருவர், மனித எலும்புகள் மற்றும் 9 மி.மீ கைத்துப்பாக்கியை கண்டுள்ளார். உடனயாக முந்தல் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

முந்தல் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். புத்தளம் மேலதிக மாவட்ட நீதிவான் ஏ. டி. அசேல டி சில்வா சம்பவ இடத்தை ஆராய்ந்தார். மீட்கப்பட்ட மனித எலும்புகளை சடலப் பரிசோதனைக்காக புத்தளம் ஆதார மருத்துவமனையின் நீதித்துறை மருத்துவரிடம் அனுப்ப உத்தரவிட்டார்.

மனித எலும்புகள் மற்றும் துப்பாக்கியைக் கண்டறிந்த பின்னர், மண்டை ஓடு, இடுப்பு எலும்பு மற்றும் பல எலும்புகள் உட்பட 7 பயன்படுத்தப்படாத தோட்டாக்களை மற்றொரு வெற்றுத்தரையில் புத்தளம் பிரிவு குற்றத்தடுப்புப் பிரிவினர் கண்டறிந்தனர்.

பொலிஸ் தலைமையகத்தின் மத்திய ஆயுதக் களஞ்சியத்திலிருந்து முந்தல் பொலிஸார் பெற்ற அறிக்கையின்படி, குருவிட்ட பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜென்ட் சுமித் என்பவருக்குத் துப்பாக்கி வழங்கப்பட்டது.

அவர் கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் காணாமல் போயிருந்தார். இருப்பினும், அந்த இடத்தில் காணப்படும் எலும்புகள் காணாமல் போன பொலிஸ் உத்தியோகத்தருடையதா என்பது இன்னும் கண்டறியப்படவில்லை. இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘பீஸ்ட்’ படத்தில் சாருக்கான்?





நடிகர் விஜய்யின் 65வது படம் ‘பீஸ்ட்’. நெல்சன் இயக்கும் இப்படத்தில் பூஜா ஹெக்டே ஹீரோயினாக நடிக்கிறார். மேலும் அபர்ணா தாஸ், யோகி பாபு, விடிவி கணேஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். அனிருத் இசையமைக்கும் இப்படத்துக்கு, மனோஜ் பரமஹம்சா ஒளிப்பதிவு செய்கிறார். காதல், நகைச்சுவை, அதிரடி சண்டை காட்சிகளுடன் இந்த படம் தயாராகி வருகிறது. இந்நிலையில், விஜய்யின் ‘பீஸ்ட்’ படத்தில் பிரபல பாலிவுட் நடிகர் ஷாருக்கான் கெஸ்ட் ரோலில் நடிக்க உள்ளார் எனப் புதிய தகவல் வெளியாகி உள்ளது. இந்த கூட்டணி உறுதியானால், விஜய் - ஷாருக்கான் இணைந்து நடிக்கும் முதல் படமாக இது அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.














## உயரத்தில் வித்தியாசம் பிரிட்டன் ஜோடி சாதனை

உடல் உயரத்தில் அதிக வித்தியாசம் உடைய பிரிட்டன் ஜோடி, உலக கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.
ஐரோப்பிய நாடான பிரிட்டனின் லண்டனைச் சேர்ந்தவர் ஜேம்ஸ் தொலைக்காட்சி நடிகர். இவரது மனைவி ஷோலி, ஆசிரியையாக பணியாற்றுகிறார்.
இவர்களது காதல் திருமணம் 2013ஆம் ஆண்டில் நடந்தது. ஜேம்ஸ்சின் உயரம் 109.3 செ.மீ., ஷோலியின் உயரம் 166.1 செ.மீ., இருவர் உயரத்துக்குமான வித்தியாசம், 56.8 செ.மீ., இதற்காக, ஜூன் 2 இல் உலக கின்னஸ் சாதனை புத்தகத்தில் இவர்கள் இடம்பிடித்துள்ளனர்.
‘ஆண் உயரம் குறைவு; பெண் உயரம் அதிகம்’ என்ற பிரிவில் சான்றிதழ் வழங்கப்பட்டது. ‘டிஸ்ப்ளாசியா’ என்ற மரபணு கோளாறால் பாதிக்கப்பட்டவர் ஜேம்ஸ். இதனால், இவரது எலும்பு மற்றும் உடல் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது.




இமயா @PiriyaalM
வலியை பொறுத்துக் கொள்வதில் யாருக்கும் பெரிய அளவில் சிரமம் இல்லை... காட்டிக்கொள்ளாமல் இருப்பதில் தான் சிரமம்.

ஊர்க்காவலன்™
நமக்கு பூஜ்யத்தில் இருக்கும் நிதானம் நூறில் இருப்பதில்லை...

இதயவன்Palm tree
சிலர் தெரியாது நடிக்கிறார்கள் சிலர் தெரியாமல் இருக்கவே நடிக்கிறார்கள்...!



# இன்றைய நாள்

**மேடம்:** பலகாலம் மனதை அரித்துக் கொண்டிருந்த கவலை நீங்கும். வாக்குறுதி யைக் காப்பாற்றி நிம்மதி அடைவீர்கள். பயம் தீரும். இளைஞர்களின் புகழ் அதிகரிக்கும்.

**இடபம்:** வாழ்வில் முன்னேறுவதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்துவீர்கள். உங்களின் பலகாலப் பொறுமைக்கு இன்று பெருமை கிடைக்கும் ஓய்வு உடல்நலம் பாதுகாக்கும்.

**மிதுனம்:** சேமிப்பு உயரும். புதிய திட்டங்கள் அனைத்தும் நிறைவேறும். உயர் கல்வி அல்லது பணிநிலை குறித்து யோசிப்பீர்கள். முன்பு உதவிய சிலரைச் சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கடகம்:** மற்றவர் தலையீட்டால் ஏற்பட்ட பிரச்னைகள் அகலும் நாள். தோல்வி யுற்றவியத்தில்புதுக்கோணத்தில் வெல்வீர்கள். சுபநிகழ்ச்சி காரணமாக நெருங்கிய விருந்தினர் வருகை உண்டு.

**சிம்மம்:** செலவுகளை குறைத்து சேமிக்க தொடங்குவீர்கள். கனவு நனவாகும். தவறுகளைத் திருத்திக் கொள்வது பற்றிய சிந்தனை மேலோங்கும். கடன் சுமை குறையும்.

**கன்னி:** வெளியூரிலிருந்து நல்ல தகவல் வரலாம். சிக்கல் நீங்கும். நெருங்கிய நண்பர்களிடையே இருந்த மனஸ்தாபங்கள் நீங்கும். வளர்ச்சி அதிகரிக்கும். முயற்சியில் முன்னேற்றம் உண்டு.

**துலாம்:** வருங்கால நலன் பற்றிய முயற்சியில் வெற்றி கிடைக்கும். நண்பர்களுக்கு இடையே ஏற்பட்ட வாதத்தைத் தீர்த்து வைப்பீர்கள். கவனத்துடன் இருக்க வேண்டும்.

**விருச்சிகம்:** பணத்தேவை நிறைவேறும். உடன்பிறந்தோருக்கு உதவுவீர்கள். கணவர் பாராட்டுவார். குழந்தைகள் பற்றிய பிரச்னைகள் தீரும். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**தனுசு:** மனச்சுமை குறையும் நாள். உறவை ஒட்டுவதில் ஆர்வம் கூடும். நவீன பொருள்கள் வாங்குவதில் அதிகச் செலவு செய்யாதீர்கள். புதியவரின் அறிமுகம் கிடைக்கும்.


**மகரம்:** ஜாமீன் போட்ட தொகை திருப்பப்படுவதால் நிம்மதி ஏற்படும். பிள்ளைகளால் மனம் மகிழும் . மனச்சுமை உங்ககளால் குறையும் பெற்றோரின் ஆசி கிடைக்கும்.

**கும்பம்:** சொத்து சம்பந்தமான வழக்கு விஷயங்கள் தள்ளிப்போகும். புதிய விஷயங்களில் ஆர்வம் செலுத்தி கற்றுக்கொள்வீர்கள்.

**மீனம்:** பங்குச் சந்தையில் அதிக முதலீடுகள் செய்யவேண்டாம், வாழ்க்கைத் துணையின் சகோதரர் மூலம் உதவி கிடைக்கும். தாய்வழி உறவினரிடமிருந்து நல்ல செய்தி ஒன்று வரும்.

# ‘அக்னி பிரைம்’ சோதனை வெற்றி

அணு ஆயுதங்களை தாங்கிச் செல்லும் அக்னி பிரைம் ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
ஒரிசா கடற்கரைக்கு கிழக்கே அப்துல் கலாம் தீவில் உள்ள 4 ஆம் ஏவுதளத்தில் இருந்து இந்த ஏவுகணை ஏவப்பட்டுள்ளது. அக்னி பிரைம் ஏவுகணை இலக்குகளை மிக துல்லியமாக எட்டியுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
அக்னி பிரைம் ஏவுகணை அணு ஆயுதங்களை சுமந்து ஆயிரம் முதல் 2 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் வரை சென்று இலக்கை தாக்கும் வல்லமை கொண்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில் 08 · 07 · 1953



விண்ணில் 04 · 07 · 2021

## செல்லப்பா விவேகானந்தன்

புளியங்கூடலை பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா விவேகானந்தன் நேற்று (04.07.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா மனோன்மணி தம்பதியரின் மகனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பையா தெய்வநாயகி தம்பதியரின் மருமகனும், தனலட்சுமி, காலஞ்சென்ற ரூபசிங்கம், வல்லிநாயகி, ஜெகதீஸ்வரி, விசஜலட்சுமி, சிவஞானம், விஜயகுமார் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பாலசுந்தரம், திலகவதி காலஞ்சென்ற ராஜதுரை பாலேந்திரம், சிவலிங்கம், தவமலர், பாமினி ஆகியோரின் மைத்துனரும், சோதிநாதன், ஞானேஸ்வரன், தனேஸ்வரன், குகனேசன் ஆகியோரின் மைத்துனரும், சுகந்தா, நிசாந்தி, சுதர்சன் ஆகியோரின் தந்தையும், அச்சுதன், அங்கஜன், ரதிபா ஆகியோரின் மாமனாரும், அசித்திகா, அனிக்சன், ஆதிரா, அனித்திகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2021) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கொட்டடி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**67/19, சீனிவாசம் வீதி,**
**கொட்டடி, யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்,**
**077 432 1137**

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 - 08 - 1941



மறைவு 03 - 07 - 2021

## நாகலிங்கம் கனகலிங்கம்

யாழ். கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கனகலிங்கம் அவர்கள் (03-07-2021) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நாகலிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பொன்னுத்துரை தம்பதிகளின் அன்பு மருமகனும்,திலகவதி அவர்களின் அன்புக் கணவரும்,அரவிந்தன்(கனடா), மதிரூபன்(ஆசிரியர்- கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்), அனிதா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம் ( கனடா ), மகேஸ்வரி, சரோஜினிதேவி, சண்முகநாதன், சற்குணநாதன், கணேசநாதன், பத்மநாதன்(கனடா), தனலக்ஷ்மி, விமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,கமலராணி, பத்மாவதி, மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,காலஞ் சென்றவர்களான கோபால், சிவலோகம், முருகையா ஆகியோரின் அன்புச் சகலனும்,வனஜா(கனடா), ரஜனி(ஆசிரியை - மானிப்பாய் மகளிர் கல்லூரி), பரலீசன்(ரமேஸ்- லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சகீரன், ஆதிரன், இலக்கியா, நட்சத்திரா, ரக்ஷியா, அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று (04-07-2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப 09:00 மணிமுதல் மு.ப 10:30 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கொக்குவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
மதிரூபன் - மகன்
0094 77 920 8676

தகவல்
பரலீசன் (ரமேஸ் - மருமகன், லண்டன்)

# மரண அறிவித்தல்

## திருநாவுக்கரசு பொன்னம்பலம்

**(உரிமையாளர் - அருள் மல்ரி சென்ரர், அரிசி ஆலை)**



மெய்கண்டான் வீதி, சரசாலை தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு பொன்னம்பலம் அவர்கள் நேற்று (04.07.2021) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் கணவரும், தாரணி (ஆசிரியை - மாதுமை முன்பள்ளி), அருட்குமரன் (கெப்பிற்றல் கேபிள் ரீ.வீ. ஒப்பரேற்றர்), பாமினி (ஆசிரியர் - மன்/பாப்பாமோட்டை றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கினேஸ்வரன், மாதுரி, துஷ்யந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரணவி ஹம்சாயினி, அரவிந், மதுஜா, மதுசன், பிரவின், ஆகியோரின் அன்பு பேரனும், பத்மாவதி, சண்முகதாஸ் (பண்டத்தரிப்பு), சாந்தநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் சிவபாதசுந்தரம், அமரர் கமலாதேவி, விமலா தேவி, ஆலாலசுந்தரம், சண்முக சுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2021) திங்கட் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்தில் தகனகம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோற்றம்**
**22.02.1951**

**மறைவு**
**04.07.2021**

**தகவல்:**
**பொ.அருட்குமரன் (மகன்)**
**077 670 3359**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எதிரணியுடன் இணைந்து

# ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக உதவக்கூடாது கூட்டமைப்பு

### அமைச்சர் சமல் ராஜபக்ச கோரிக்கை

கொழும்பு, ஜூலை 5
வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாட்டின் நலனைக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும். ஆட்சியைக் கவிழ்க்க எத்தனிக்கும் எதிரணியினரின் சதி நடவடிக்கைகளுக்கு அவர்கள் துணைபோகக் கூடாது. இவ்வாறு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் சகோதரரான அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் படிப்படியாகத் தீர்த்து வைப்பதில் ராஜபக்ச அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது. என்னைப் பல தடவைகள் நாடாளுமன்றத்தில் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இதனை நான் தெரியப்படுத்தியிருக்கின்றேன்.

அதன் ஒரு கட்டமாகவே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, 16 தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார். சிறையிலுள்ள ஏனைய தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலையையும் துரித்தப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி அண்மையில் நடத்தவிருந்த சந்திப்பு தவிர்க்க முடியாத காரணத்தாலேயே ஒத்திவைக்கப்பட்டது. அந்தச் சந்திப்பு விரைவில் நடைபெறும்.

தற்போதைய கொரோனா நிலைமையால் நாடு பொருளாதார ரீதியில் பல சவால்களைச் சந்தித்துள்ளது. இந்தச் சூழ்நிலையை எதிரணியினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைகின்றனர். அரசுக்கு எதிராகவும் அரசுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலும் பொய்யான கருத்துக்களை எதிரணியினர் பரப்பி வருகின்றனர். எதிரணியினரின் இந்தக் கட்டுக்கதைகளை நாட்டு மக்கள் நம்பக்கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் எதிரணியினரின் சுயநல அரசியலைக் கருத்தில் கொண்டுசெயற்பட வேண்டும். கடந்த நல்லாட்சி அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் தமிழ் மக்களையும் நம்ப வைத்து ஏமாற்றியது. இதனைத் தமிழ்த் தரப்பினர் மறக்கக்கூடாது, என்றார். (ம-ஒ.22)

## 200 பேருடன் திருமணம் அனைவரும் தனிமையில்

கொழும்பு, ஜூலை 5
புத்தளத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி நடத்தப்பட்ட திருமணம் ஒன்று நேற்றுமுன்தினம் சுற்றி வளைக்கப்பட்டு, புதுமண தம்பதி உட்பட திருமணத்தில் கலந்துகொண்ட அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மணமகன் வெளிநாட்டிலிருந்து கடந்த 18 நாள்களுக்கு முன்னர் இலங்கை வந்துள்ளார். அவர் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து வீடு திரும்பிய நிலையில் திருமணத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

குறித்த திருமண நிகழ்வில் 200க்கும் அதிகமான நபர்கள் கலந்துகொண்டிருந்தனர் என்று சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

சுகாதார பரிசோதகர்கள் திருமண நிகழ்வுக்கு வருகின்றனர் என்று தகவல் கிடைத்தவுடன் பலர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். (து-இ)


# பதவி வெற்றிடம்

**வடக்கு மாகாண தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆரம்பக்கல்வி (ஆங்கிலம்) ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு I (இ) தரத்திற்கு, ஆங்கில டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021**

தமிழ் மற்றும் சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கானவிண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.07.26 ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk→Recruitment and Exam → Advertisement என்ற வடக்கு மாகாண சபை இணையத்தளத்தில் பார்வை யிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

சி.திருவாகரன்
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்குமாகாணம்.
05.07.2021


# கரும்புலிகள் தினம் இன்று

## புலம்பெயர் நாடுகளில் அனுஷ்டிப்பு

லண்டன், ஜூலை 5
இன்று ஜூலை 5 கரும்புலிகள் தினமாகும். இதனை அனுஷ்டிக்கும் வகையில் புலம்பெயர் நாடுகளில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

விடுதலைப் புலிகளின் காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் 5ஆம் திகதி கரும்புலிகள் தினம் கடைப்பிடிக்கப்படும். கடந்த நல்லாட்சிக் காலத்திலும் கரும்புலிகள் தினம் விடுதலைப் புலிகளின் முதலாவது கரும்புலியான கப்டன் மில்லரின் நினைவிடத்திலும் ஏனைய இடங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் கோத்தாபய அரசின் ஆட்சிக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் இறுக்கமான கட்டுப்பாடுகள் காரணமாக இந்த ஆண்டு தமிழர் பகுதிகளில் கரும்புலிகள் தினம் கடைப்பிடிக்கப்படவில்லை. புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் இன்றையதினம் கரும்புலிகள் தினத்தை கடைப்பிடிக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்துக்கு எதிராக கப்டன் மில்லர் தற்கொலைத் தாக்குதல் நடத்திய தினமே இன்றாகும்.

# கோத்தாபயவைத் தொடர்ந்து மஹிந்தவும் கண்டிக்கு பயணம்

கொழும்பு, ஜூலை 5
பிரதமர் மஹிந்த ராஜபக்ச தனது பாரியாருடன் கண்டி தலதா மாளிகைக்கு நேற்றுச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

கடந்த வாரம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, கண்டி தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த நிலையில் பிரதமர் நேற்றைய தினம் சென்றுள்ளார். பிரதமரும் அஸ்கிரி மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்தார். (ஒ,இ)




# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
06 . 10 . 1937

மறைவு
05 . 06 . 2021



**அமரர் திருமதி அழகப்பெருமாள் மகேஸ்வரி**

நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

127/10, அங்களப்பாய் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு

17 . 01 . 1950



இறப்பு

01 . 07 . 2021

## திரு. செல்லப்பா சிவராசா (சின்னத்தம்பி)

(முன்னாள் விற்பனை முகாமையாளர் - அண்ணா தொழிலகம்)

யாழ். இணுவில் துரை வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு. கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு. செல்லப்பா சிவராசா அவர்கள் கடந்த (01.07.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா அன்னம்மா தம்பதிகளின் இளைய புத்திரரும் காலஞ்சென்ற நடராஜா ராஜலட்சுமி தம்பதிகளின் மூத்த மருமகனும். வசந்தகுமாரியின் அன்புக் கணவரும் சதீஸ்கரன் (இலங்கை). பிரபாகரன் (லண்டன்). கோகுலகரன் (துபாய்). தற்பரன் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும். திவ்யா (லண்டன்). பிரியதர்ஷினி (துபாய்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் லவினின் (துபாய்) ஆசைப் பேரனும். குருசாமி. மகேஸ்வரி. காலஞ்சென்ற தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும். காலஞ்சென்ற வேலுப்பிள்ளை. கன்காம்பிகை. காலஞ்சென்ற குணசிங்கம். விஜயலக்சுமி. சுசீலா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும். விமலேந்திரன். சிவசோதி ஆகியோரின் சகலனும். பாவேந்தன் - பாமினி. பிறேமா - பத்மலிங்கம். மணிவண்ணன் - கார்த்திகா. வனிதா - வைகுந்தன். பாஸ்கரன் - கௌசல்யா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும். சுகன். ஜெயன். துளசி. துசன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும். மலர்விழி. நந்தகுமார். பாண்டியன். வசந்தினி. செந்தாமரை. கைலையங்கிரிவாசர். சண்டிகா - செல்வராஜா. காலஞ்சென்ற கேதீஸ்வரி. தயாளன். யோக சுதன். செந்தில்குமரன்- சுமதி. சுசி - சுதாகரன். கோபிநாத் ஆகியோரின் தாய்மாமனாரும்: தியாகலிங்கம் - பத்மாவதி. மகேஸ்வரன்- பாலேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.07.2021) திங்கட்கிழமை பொரளை சுப்ரீம் (Supreme) மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்றைய தினமே இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**செட்டிவளவு ஒழுங்கை,**
**இணுவில் மேற்கு**
**077 926 4049, 077 352 6153 (மனைவி)**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதரர்கள், மருமக்கள்.**

# 6ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் திரு. சு. பொ. நடராசா

**( அண்ணா தொழில் குழுமத்தினர் தலைவர் )**

அண்ணா நிறுவன நாயகனுக்கு...
ஆண்டுகள் ஆறு போயிடினும்
இன்றும் நினைவுகள் காயவில்லை
மீண்டும் பிறப்பொன்றுண்டெனில் – வந்து
மேதினியில் பிறந்திட வேண்டும் என்போம்

ஏழ்மையில் பிறந்திட்ட பலருக்கு
ஏணியாய் இருந்து தொழில் தந்தீர்.
ஆண்டுகள் ஆறு போயிடினும்
அன்றுபோல் எம்மில் வாழ்கின்றீர்.

வாழ்வைச் சிறப்புற அமைப்பதற்கு – நல்
ஆதாரம் தந்து சிறப்பித்தீர் – வாழ்வில்
தாழ் நிலை என ஒன்றும் இல்லை
என்ற தத்துவத்தைத் தினம் சொல்லித் தந்தீர்.

தோழமையோடு தொழில் கொடுத்துத்
தொண்டுகள் பல பல ஆற்றி நின்றீர் – மறைந்து
ஆண்டுகள் ஆறு போயிடினும்
ஆறாத் துயரில் நாம் வாடுகிறோம்.

இணுவில் தெற்கு,
இணுவில்

தகவல்
அண்ணா குடும்பத்தினர்
அண்ணா தொழில் குடும்பத்தின் ஊழியர்கள்.

# மரண அறிவித்தல்



## தம்பிப்பிள்ளை சின்னத்துரை

பழம்வீதி ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சின்னத்துரை நேற்று (04.07.2021) ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி -சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக்கணவரும், சுசீலாதேவி, நிர்மலாதேவி, பிறேமா, அம்பிகாபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற விசாலாட்சி, நாகம்மா, சின்னராஜா மற்றும் செல்லத்துரை, திரவியம், யோகலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், தயாளினி, மகிந்தன், அஜந்தன், கிருபாகரன்(கரன்), பிரதீப்குமார் (ஜெனா), ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஜெயஜீவனின் அன்பு மாமனாரும், அக்ஷயா, சாய்சரன், அஸ்மிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2021) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக யாழ் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோற்றம்**
**20.09.1943**

**மறைவு**
**04.07.2021**

**மானிப்பாய் வீதி,**
**ஆனைக்கோட்டை**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 110 0355, 077 529 6794**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்

வாழ்த்துக்கள்



## பா. கோபி

(05.07.2021)

பலாலி வீதி திருநெல்வேலி தெற்கில் உள்ள வீரகத்தி விநாயகர் கோவில் அருகாமையில் பாலசுப்பிரமணியம் கோபியின் இனிய பிறந்தநாளில் வாழ்த்துபவர்கள் மனைவி தர்சினி, அக்கா மலர்விழி, சுபாஸினி, தர்ஸினி, அத்தான் குலம், மருமக்கள், சித்தி ஆகியோர் சிறப்புடன் வாழ வேண்டுமென்று வாழ்த்துகின்றார்கள். இவரது தாய் தன் உயிர் உள்ளவரை நோய் நொடி இன்றியும் சந்தோஷமாகவும் வாழ வேண்டும் என்று வீரகத்தி விநாயகரை வேண்டி வாழ்த்துகின்றார்.

குடும்பத்தினர்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் மலராக 01.06.1944 — மகிமைக்குள் 05.06.2021

திருமதி

## சின்னம்மா [அம்பிகாபதி] தர்மராஜா

எங்களையெல்லாம் சோகத்தில் ஆழ்த்தி விட்டு, எமை விட்டுப் பிரிந்து மகிமைக்குள் பிரவேசித்த எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே, நாங்கள் உங்களை ஒரு நாள் முகமுகமாய் தரிசிப்போம் என்ற நம்பிக்கையில் ஆறுதலடைகிறோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
05.07.2021

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# கண்ணீர் அஞ்சலி



## திரு. செல்லப்பா சிவராசா

எமது சிறிய தந்தையாகிய அமரர் செல்லப்பா சிவராசா (சின்னத் தம்பி) அவர்கள் கடந்த 01.07.2021 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்ததையிட்டு அண்ணா குடும்பத்தினரும், தொழிலக ஊழியர்களும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம். அவருடைய ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

இணுவில் தெற்கு,
இணுவில்

அண்ணா குடும்பத்தினரும்
அண்ணா நிறுவன ஊழியர்களும்

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### பதிவுத்...

பெண்ணுக்கே அன்டிஜன் சோதனையில் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து குறித்த திருமணத்தில் கலந்துகொண்டவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களுக்குப் பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ம)

### வாள்வெட்டுக்கு....

ணம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோண்டாவில் செல்வபுரம் பகுதியில், கடந்த 30ஆம் திகதி வீடு புகுந்து 9 பேரை வாளால் வெட்டி படுகாயப்படுத்தியமை மற்றும் படப்பிடிப்பு நிலையம் ஒன்றுக்கு தீவைத்தமை ஆகிய் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டுகளின் கீழ் 3 பிரதான சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி குறித்த சம்பவத்தில் ஒருவரின் கை துண்டாடப்பட்டதுடன் (துண்டாடப்பட்ட கை பின்னர் பொருத்தப்பட்டுள்ளது) மேலும் 8 பேர் படுகாயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் பொம்மைவெளியைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவரும் கோண்டாவிலைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரும் கொக்குவில் வராகி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த 19 வயதுடைய ஒருவருமே இதுவரை கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் மூவரிடமிருந்து 3 கஜேந்திர வாள்களும் 2 சாதாரண வாள்களும், ஒரு முச்சக்கர வண்டியும், ஒரு மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டன. மூவரிடமும் முன்னெடுத்த விசாரணையில் சம்பவ தினத்தன்று 6 மோட்டார் சைக்கிள்களில் 16 பேர் இணைந்து சென்று இந்த வன்முறையில் ஈடுபட்டனர் என்று வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

**குழுவுக்குப் பாடல்**

இவைதவிர, வாள்வெட்டுக் குழுவிலிருந்து பிரிந்துசென்ற கோண்டாவில் செல்வபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள், பிறிதொரு வாள்வெட்டுக்குழுவாக செயற்படத்தொடங்கி, அந்தச் சமூகவிரோத குழுவுக்கு பாடல் ஒன்றையும் தயாரித்து வெளியிட்டனர் என்றும் அந்தப் பாடலை ஒலிபரப்பிய மையாலேயே, குறித்த படப்பிடிப்பு நிலையத்துக்கு தீ வைக்கப்பட்டது, வாள்வெட்டு நடத்தப்பட்டது என்றும் கைதானவர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் தெல்லிப்பழை, காங்கேசன்துறை, பொம்மைவெளி, கோண்டாவில் பகுதிகளைச் சேர்ந்த 13 சந்தேகநபர்கள் தேடப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து மறைத்து வைத்துள்ளவர்களும் கைது செய்யப்படுவார்கள். கைதுசெய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபர்கள் மூவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-26)

### சுகாதார...

அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பாதிக்கப்பட்டிருந்தார். இதன்போது வற்றாப்பளை கண்ணகி அம்மனுக்கு வைத்த நேர்த்திக்கடனைச் செலுத்துவதற்காகவே அவர் நேற்று அங்கு சென்று சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அமைச்சரின் வருகையை அறிந்து ஊடகவியலாளர்கள் அங்கு கூடிய போது, இது தனது தனிப்பட்ட பயணம் என்றும் இதனால் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பதைத் தவிர்க்குமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார். எனினும் ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் அமைச்சரின் வருகைக்காக காத்திருந்ததை அடுத்து அவர் ஆலயத்தின் பின்பகுதியால் வெளியேறிச் சென்றுள்ளார். (ம)

# 32 ஆவது பிறந்த நாள் வாழ்த்தும் 10 ஆம் ஆண்டு நினைவுகளும்

## மகேந்திரசெல்வம் சுரேன்



முதல் வாரிசாக பிறந்த
- உன்னை
முதலாவதாக தொலைத்ததும்
- ஏனோ
விழிகள் உன்னை காண
- தவியாய் தவிக்கிறது
நிதர்சனத்தை அறிந்தும்
- ஏற்க மறுக்கிறது
10 ஆண்டுகள் கடந்தது ஐயா
ஆனாலும் தீராத ஏக்கம் ஏனோ
உன் பிறந்த நாளை எண்ணி
- காத்திருக்கின்றோம்
ஒரு முறையாவது மீண்டு
- வரமாட்டாயா என்று

பிறப்பு 05.07.1989 — இறப்பு 14.05.2011

என்றும் உன்
குடும்பத்தினர்

# 31 ஆம் நாள் இதய அஞ்சலி

அன்னை மடியில் 20.08.1935 — ஐயனார் அடியில் 05.06.2021



## அமரர் பொன்னையா குமாரசாமி

(முன்னாள் வர்த்தகர் - விக்னேஸ்வரா ஸ்ரோஸ்- மன்னார்)

ஐயா இனி என்று காண்போம் - உம்மை
ஆண்டவன் படைப்பில் அற்புதமானவர் நீர்
இன்முகம் கொண்டு அனைவருடனும் பழகுபவரே
ஈசன் திருவடியை நாடியது ஏனோ
உண்மையான மனிதராய் வாழ்ந்து
ஊர் மீது அதீத பற்றுக் கொண்டவரே
எம்மை விட்டு விண்ணுலகம் சென்றதேனோ
ஏணியாக இருந்தவரே ஏன் சென்றீர்
ஐயம் போக்குபவரே நாம் அழுவது கேட்கவில்லையா
ஒரு முறை மீள உயிர் பெற்று வரமாட்டீரோ
ஓயாமல் உம்மை எண்ணிப் பார்க்கிறோம்
ஔடதமே எம்மை விட்டு ஏன் சென்றீர்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கொக்குவில்

குடும்பத்தினர்
077 649 5436


**மணமகன் தேவை**

1988. இந்து. பூரட்டாதி. Teacher சொந்த இடம்: நவாலி. பதிவு: 6163. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo 04, (கிளைகள் கிடையாது) www.EQMarriageService.com
076 664 9401

**மணமகன் தேவை**

1990. இந்து. கேட்டை. Development Officer சொந்த இடம்: பருத்தித்துறை. பதிவு: 6073. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo 04, (கிளைகள் கிடையாது) www.EQMarriageService.com
076 664 9401

**மணமகள் தேவை**

1990. இந்து. விசாகம். I.T Consultant சொந்த இடம்: மாவிட்டபுரம். பதிவு: 6102. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo 04, (கிளைகள் கிடையாது) www.EQMarriageService.com
076 664 9401

**மணமகள் தேவை**

1986. இந்து. அவிட்டம். Doctor சொந்த இடம்: யழ்ப்பாணம். பதிவு: 5675. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo 04, (கிளைகள் கிடையாது) www.EQMarriageService.com
076 664 9401


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றுமை....

இந்த முயற்சியை கட்டமைப்பு ரீதியாகத் தொடர்வதற்குரிய நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சிகளிடையிலான சந்திப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றானரெலோ அழைப்புவிடுத்திருந்தது. அந்தச் சந்திப்பு நேற்றையதினம் நடைபெற இருந்தது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட் என்பன தீடீரென சந்தித்துப் பேச்சு நடத்தின. இதன்போது தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. இதனடிப்படையில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடனான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள ரெலோவின் அலுவலகத்தில் நேற்று மாலை 4 மணியிலிருந்து 5.30 மணி வரை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் மாவை சோ.சேனாதிராசா, ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன், புளொட் சார்பில் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் ஆரம்பத்திலேயே கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 9 கட்சிகளின் பேச்சு இடைநடுவில் கைவிடப்பட்டமை தொடர்பில் ஆராயப்பட்டது.

தமிழ்த் தேசியப் பேரவை உருவாக்கம் தொடர்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கருத்து தெரிவித்தமையால் குழப்பம் ஏற்பட்டது என்று தமிழ் அரசுக் கட்சி தலைவர் மாவை.சேனாதிராசா குற்றம் சுமத்தியுள்ளார். அது தவறான செயற்பாடு என்றால் அதனை அப்போதைய சூழலிலேயே சுட்டிக்காட்டி கட்சிகளின் கூட்டு முயற்சி தொடர்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும் என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஒற்றுமை முயற்சிகளில் ஏற்பட்ட பின்னடைவுகள், தவறுகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கியதாக இந்த கூட்டு முயற்சியை முன்னெடுக்க தயாராக இருப்பதாக அனைத்து கட்சிகளும் இணங்கின. இதையடுத்து விரைவில் குழுவாகவோ, தனித்தோ ஏனைய கட்சிகளின் தலைவர்களை சந்தித்து பேசி, நிலைப்பாடுகள் சார்ந்த கூட்டு ஒன்றை உருவாக்குவதென தீர்மானிக்கப்பட்டது. (ஒ.5)

## மேலும்...

ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 236ஆக உயர்வடைந்துள்ளது. நேற்றுமுன்தினம் சாவடைந்த 45 பேரில் 25 பெண்களும், 20 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

அதன்படி 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 3 பெண்களும், 7 ஆண்களும் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்ட 22 பெண்களும், 13 ஆண்களும் சாவடைந்துள்ளனர் என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

## யாழ்ப்பாணத்தில்....

வரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த குறித்த பெண் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். அவர் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர். (ம)

## கிளிநொச்சியில்...

இதையடுத்து கிளிநொச்சியில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5ஆக அதிகரித்துள்ளது.

கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த உதயநகர் பகுதியை சேர்ந்தவரே (வயது 61) உயிரிழந்துள்ளார் என்று கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார். (ம-113)

## வடக்கில்...

பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 597 பேரின் மாதிரிகள் நேற்றுச் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலேயே அவர்களில் 41 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அவர்களில் முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 7 பேரும், செட்டிக்குளம் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும், ஆனைவிழுந்தகுளம் இடைத்தங்கல் நிலையத்தில் ஒருவரும், பூந்தோட்டம் இடைத்தங்கல் நிலையத்தில் 3 பேரும், யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 7 பேரும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும், மன்னார் மாவட்ட மருத்துவமனையில் ஒருவரும், மானிப்பாய் பிரதேச மருத்துவமனையில் 3 பேரும், மருதங்கேணி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேரும், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேரும், ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேரும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேரும், காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 4 பேரும், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் 2 பேரும் உள்ளடங்குகின்றனர். (ம)

## மாகாண...

மான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். நாட்டில் கொரோனாப் பரவல் நிலைமையின் ஆபத்து தொடர்வதால் மாகாணங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாடு நீடிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, தற்போதைய நடமாட்டக் கட்டுப்பாடு தளர்வுகள் இன்று முதல் எதிர்வரும் 14 நாள்களுக்கு நடைமுறையில் இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் 19ஆம் திகதியின் பின்னரே மீளவும் பயணக் கட்டுப்பாடு விதிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (ம-ஒ,22)

## புதிய...

இன்று முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வரை அமுலாகவுள்ள வகையில் இந்த சுகாதார வழிகாட்டி வெளியிடப்பட்டுள்ளது.

பொதுப்போக்குவரத்து சேவைகளில் பயணிக்க, ஆசன கொள்ளளவில் 50 சதவீதமானோருக்கு மாத்திரமே பய

ணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், மேல் மாகாணத்தில் இந்த எண்ணிக்கை 30 சதவீதமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், தனியார் மற்றும் வாடகை வாகனங்களில் ஆசன எண்ணிக்கைக்கு மாத்திரமே பயணிகள் பயணிக்க முடியும். ஆடைத் தொழிற்சாலைகள் உட்பட ஏனைய தொழிற்சாலைகள் இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான ஊழியர்களைக் கொண்டு இயங்க வேண்டும்.

சேவை அவசியத்துக்கு ஏற்ப, கடமைக்கு அழைக்கப்படக்கூடிய ஊழியர்களின் எண்ணிக்கையை நிறுவன பிரதானி தீர்மானிக்கலாம். அத்துடன் வீட்டிலிருந்து பணியாற்றக்கூடியவர்கள், அதனை நடைமுறைப்படுத்துவது சிறந்ததாகும்.

திருமண நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதி இல்லை. எனினும், மணமகன் மற்றும் மணமகள் உட்பட ஆகக்கூடியது 10 பேரை மாத்திரம் கொண்டு பதிவுத் திருமணத்தை நடத்தலாம்.

கொரோனா அல்லாத காரணத்தால் மரணிப்போரின் இறுதிக்கிரியைகள், பூதவுடல் கையளிக்கப்பட்டு 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். இறுதி நிகழ்வுகளில் பங்கேற்க 15 பேருக்கு மாத்திரமே அனுமதி உண்டு. வங்கி, நிதி நிறுவனங்கள் மற்றும் அடகுப்பிடிப்பு நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரே தடவையில் மொத்தமாக 10 வாடிக்கையாளர்கள் மாத்திரமே சேவைகளை பெற்றுக்கொள்ளமுடியும். வீட்டில் இடம்பெறும் விருந்துபசார நிகழ்வுகள் மற்றும் சமய நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. அத்துடன், மத வழிபாட்டுத் தலங்கள் அனைத்தும் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும்.

சமூக களியாட்ட விடுதிகளுடனான மதுபானசாலைகள், இரவு நேர களியாட்ட விடுதிகள், சூதாட்ட மற்றும் பந்தய நிலையங்கள் என்பன தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும். எனினும், உடற்பிடிப்பு நிலையங்களைத் (ஸ்பா) திறப்பதற்கு அனுமதியுண்டு.

சிறப்பங்காடிகள் மற்றும் ஆடை விற்பனை நிலையங்களில், அவற்றின் மொத்த இடப்பரப்பில் 25 சதவீதமான அளவு வாடிக்கையாளர்களை மாத்திரம் ஒரே தடவையில் அனுமதிக்க முடியும். விற்பனை நிலையங்களை சுகாதார வழிமுறைகளுக்கமைய திறக்க முடியும். ஒரே தடவையில் 3 வாடிக்கையாளர்கள் மாத்திரமே உள்நுழைய முடியும்.சிகையலங்கார நிலை யங்களில் சுகாதார வழிகாட்டல்களின் கீழ் பணிகளை முன்னெடுக்க முடியும். சிறைச்சாலை, முதியோர் மற்றும் சிறுவர் விடுதிகளுக்கு செல்லப் பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. திரையரங்குகள் மற்றும் நூதனசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும். (ம-22)

## உத....

வர்கள் மற்றும் தனிப்பட்ட பரீட்சாத்திகளிடம் இருந்து இன்று முதல் இணையம் ஊடாக ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

பரீட்சைகள் திணைக்களத்தின் https://www.doenets.lk/ என்ற இணையத்தளத்தில் விண்ணப்பிக்க முடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார். விண்ணப்ப இறுதித் திகதியாக ஜூலை 30ஆம் திகதி குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-26)

## மாஸ்க்...

ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர், முகக்கவசம் அணியவில்லை என்று தெரிவித்து இளைஞன் ஒருவரைத் தாக்கியதை அடுத்து அந்தப் பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது.

சம்பவத்தை அறிந்த பொதுமக்கள் இராணுவச் சிப்பாய் எவ்வாறு இளைஞனைத் தாக்க முடியும். இதற்கு அதிகாரமும் அனுமதியும் வழங்கியது யார்? என்று வினவியுள்ளனர். இதையடுத்து அங்கு வந்த புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் இதுதொடர்பில் முறையிடப்பட்டுள்ளது. இளைஞன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. (ம)

## கொரோனா...

பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 65 ஆயிரத்து 574ஆக அதிகரித்துள்ளது. கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 33 ஆயிரத்து 317ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 29 ஆயிரத்து 21ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

## இராணுவ...

முன்னெடுக்கப்படவுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனாவைத் துரிதமாகக் கட்டுப்படுத்தும் நோக்கில் சுகாதாரத்துறையினருக்கு சமாந்தரமாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அதனடிப்படையில் மேல் மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு நபரும் வார நாள்களில் காலை 8.30 மணி முதல் 4.30 மணி வரையில் குறித்த மருத்துவமனைகளில் தடுப்பூசியின் முதல் டோஸ் அல்லது இரண்டாவது டோஸை செலுத்த முடியும். நாரஹேன்பிட்டி, பனாகொட மற்றும் வேரஹெர பகுதிகளில் உள்ள இராணுவ மருத்துவமனைகளிலும், பொரளை, ருவன்புர, கட்டுநாயக்க, இரத்மலான மற்றும் ஏகல பகுதிகளில் உள்ள விமானப்படை மருத்துவமனைகளிலும், வெலிசல மற்றும் கொழும்பு சைத்திய வீதியில் உள்ள கடற்படை மருத்துவமனைகளிலும் கோவிட் தடுப்பூசியைச் செலுத்த முடியும்.

அத்துடன் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் சில இராணுவ வைத்தியசாலைகள் ஊடாக தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் காலி கோட்டை, மாத்தறை நில்வலா முகாம், தியதலாவ, அநுராதபுரம், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய இராணுவ மருத்துவமனைகள் இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மெஸ்ஸி அசத்தலான ஆட்டம் அரையிறுதியில் ஆர்ஜென்ரீனா!

பிரேசிலியா, ஜூலை 5

**கோபா அமெரிக்காத் தொடரில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஆட்டத்தில் ஈக்குவடோரை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது ஆர்ஜென்ரீனா.**

ஆட்டத்தின் முதல் 40 நிமிடங்கள் வரையில் இரு அணிகளாலும் கோல்கள் எதையும் பதிவு செய்ய முடியவில்லை. 40 ஆவது நிமிடத்தில் றொட்ரிகோ டி பவுல் ஆர்ஜென்ரீனாவின் முதலாவது கோலைப் பதிவு செய்தார். இரண்டாவது பாதியின் 84ஆவது நிமிடத்தில் மார்ட்டினாஸும் 93ஆவது நிமிடத்தில் மெஸ்ஸியும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனா அணி வெற்றி பெற்றது. (ம)

# டெஸ்ட் தரப்படுத்தலில் வில்லியம்சன் முதலிடம்

## சிமித்தின் ஆதிக்கத்துக்கு முடிவு

லண்டன், ஜூலை 5

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் ஆட்டங்களுக்கான தரப்படுத்தல் பட்டியல் புதுப்பிக்கப்பட்டுள்ளது. வில்லியம்சன் முதலிடம் பிடித்தார்.

டெஸ்ட் துடுப்பாட்டப் பட்டியலில் ஆஸ்திரேலிய வீரரான சிமித் கடந்த பல மாதங்களாகவே முதலிடத்தில் நீடித்து வந்தார். இந்திய அணித்தலைவர் கோலி, இங்கிலாந்து அணித்தலைவர் ரூட் ஆகியோர் பலமுறை முயன்றும் சிமித்தை பின்தள்ள முடியவில்லை.

இந்த நிலையில் நியூசிலாந்து அணித்தலைவரான வில்லியம்சன் தற்போது சிமித்தை பின்தள்ளி முதலிடம் பிடித்தார். வில்லியம்சன் 901 புள்ளிகளுடன் முதலிடத்திலும், சிமித் 891 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், லபுஸ்சேன் 878 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், கோலி 812 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், ரூட் 797 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். (ம)

**வீடு வாடகைக்கு**

கச்சேரி நல்லூர் வீதியில், சகல வசதிகளுடனும் புதிதாக கட்டப்பட்ட 2 மாடி வீட்டில், மேல் மாடி மட்டும் வாடகைக்கு விடப்படும்.

077 794 7192

**சாரதி தேவை**

JCB சாரதி (Driver) தேவை.

077 351 4753

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். யாழ் நகரிலிருந்து 1½ km தூரம் (பரப்பின் விலை 5 லட்சம் ரூபா)**

தொடர்பு: 076 221 2037, 076 734 1023, 077 064 2661

**பணியாட்கள் தேவை**

துன்னாலையில் இயங்கும் தளபாடங்கள் விற்பனை நிலையத்தில் பணியாற்றுவதற்கு பணியாட்கள் தேவை.

தொடர்பு இலக்கம் 077 711 4852

இங்கிலாந்து இலங்கை

# இறுதி ஒருநாள் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது

லண்டன், ஜூலை 5

இலங்கை இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இறுதி ஒருநாள் ஆட்டம் நேற்று மழை காரணமாகக் கைவிடப்பட்டது. இதனால் இங்கிலாந்து அணி 2:0 என்ற அடிப்படையில் கிண்ணம் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது. சானக அதிகபட்சமாக 48 ஓட்டங்களைக் குவித்தார். ரொம் கரன் 4 இலக்குகளைக் கைப்பற்றினார். மழை காரணமாக இங்கிலாந்து துடுப்பெடுத்தாடவில்லை. ஆட்டம் கைவிடப்பட்டது. (ம)



# உக்ரைனைத் தோற்கடித்து இங்கிலாந்து முன்னேற்றம்!

லண்டன், ஜூலை 5

**யூரோ கிண்ணத் தொடரில் நேற்று நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் உக்ரைனை மிக இலகுவாகத் தோற்கடித்தது இங்கிலாந்து அணி. இதையடுத்து இங்கிலாந்து அணி அரையிறுதிக்கு முன்னேறியது.**

ஆட்டத்தின் 4ஆவது நிமிடத்தில் இங்கிலாந்தின் அணித்தலைவர் ஹரி கேன் கோலொன்றைப் பதிவுசெய்தார். 45ஆவது நிமிடத்தில் ஹரி மேக்யூரி மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் இங்கிலாந்து அணி 2:0 என்று முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதியிலும் இங்கிலாந்தின் ஆதிக்கம் நீண்டது.

50ஆவது நிமிடத்தில் ஹரி கேன், 63ஆவது நிமிடத்தில் ஹென்டர்சன் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது இங்கிலாந்து அணி. (ம)

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 06 1965



மறைவு 04 07 2021

**கிருஷ்ணபிள்ளை உதயகுமார்**

வெல்லன் மத்தொனி கரவெட்டி மேற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் இல.89, A-09 வீதி, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை உதயகுமார் நேற்று (04.07.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், கந்தசாமி, கிருஸ்ண குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராணி, செல்வநாதன், இந்திராணி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம், ஜெயராணி, தனபாலரத்தினம் (கண்ணன்- கிளிநொச்சி), வசந்தராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுபோதனா (கிளிநொச்சி), தர்சனா (லண்டன்), கிரிசாந் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனஜன், சிவா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷாஜகான் மகிழினி, மாலினி, டனுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2021) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கிளிநொச்சி
த.சுபோதனா - 0771032811

தகவல்:
குடும்பத்தினர்,

செய்தி : 021 463 0600 - விளம்பரம் : 021-463 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org